ISSN 2424-6654

தமிழ்த் தூது

# தாயக ஒலி

THAYAKA OLI

இரு திங்கள் ஏடு

32










கார்த்திகை - மார்கழி 2017

விலை ரூபா 100/=

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்



உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடைவைகளையும்
தெரிவு செய்து கொள்ளுங்கள்

பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக் கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்

கூறைப் புடைவைகள் பட்டுப்புடைவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும்
30% விலைக்கழிவில்!

# SELVARAJA

## Gold House & Textiles

Exclusive Designer Jewellery & Sarees

You are the best
For you we are the best

**162B, Mitcham Road, London SW17 9NJ**

**Tel : 020 8767 3795 | 07825 005 269**

திருமண நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட உங்கள்
குடும்பத்திற்கு தேவையான முழுமையான ஆடைகள் அனைத்தும் இனி ஒரே இடத்தில்...




317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098 |
F: +94 11 2508934 E: info@littleasia.lk | www.littleasia.lk | skype: little.asia.emporium
73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593 |
F: +94 11 2391745 E: info@littleasiasilk.com | www.littleasiasilk.com | Skype: little.asia.silk




134/A, Galle Road, Colombo 06
011 4181378 | 011 2360334 / 011 2360338

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# தாயக ஒலி

[தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு]

வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை - மார்கழி 2017 வில்-06 ஒலி-32

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்

## தாயக ஒலி

**பிரதம ஆசிரியர்**
த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**
தாயகன் (இலண்டன்), சி.பவன் ( இலங்கை)

**மதியுரைக் குழு**
பேராசிரியர் சபா ஜெயராசா
பேராசிரியர் வ.மகேஸ்வரன்
வவுனியூர் இரா உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
ந.கருணை ஆனந்தன்
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
செ.ராஜேந்திரா
இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**

| | | |
|---|---|---|
| கனடா | : | முருகேசு கிருபாகரன் |
| | | அ.பற்குணன் |
| இலண்டன் | : | இ.பாலேந்திரநாதன் |
| அமெரிக்கா | : | வே.பிரேமதயாளன் |
| அவுஸ்திரேலியா | : | தி.திருநந்தகுமார் |
| பிரான்ஸ் | : | ச.சச்சிதானந்தம் |

**ஐரோப்பிய நாடுகளுக்கான
விசேட ஒருங்கிணைப்பாளர்
திருமலை பாலா**
தொ.பேசி : 0044(0) 7956486014

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை
தொ.பேசி. : 0094(0)112364124
Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்
- ஆசிரியர்

## உள்ளே ஒலிப்பவை

பேனா முனையிலிருந்து... 02

**கட்டுரை :**
- தேம்பாவணிதந்த வீரமாமுனிவர் 03
- தமிழ்நிதி - தாமரைத் தீவான் 12
- தமிழறிஞர் சைமன் காசிச்செட்டி 21
- மார்க்சிசம் 32
- வெற்றியுடன் வாழ்வாங்கு வாழ 35

**சிறுகதை :**
- பஸ்பயணமும் நினைவலைகளும் 07
- உண்மைகள் உறைக்குமா? 28
- அவன் அப்படித்தான் 43

**கவிதை**
- தாய் + அன்னியமாய்... 17
- விடுதலைக் காதல் 31

**நூல் அறிமுகம்**
- புதினம் 37
- இராஜம் புஸ்பவனம் படைப்புக்கள் 47

**விளையாட்டு**
- அனிதாவின் தேசிய சாதனை 06

**அறநெறிச்சாரம் :**
- எல்லாம் நன்மைக்கே 14

**கேட்டதைச் சொல்ல வந்தோம்**
- பரிசளிப்பு விழா உரை 18
- கல்விக் குறைபாடுகள் 41

**அறிந்ததை சொல்ல வந்தோம்**
- பட்டினியால் பாதிப்பு 46
- ஈழநாடு சென்று வந்தேன் 40

**கதைகள்**
- நகைச்சுவைக் கதைகள் 11
- பாலபாடக் கதை 39

**நினைவுப்பேருரை**
- உலகமயமாக்கலும் ஊடகங்களும் 24

**ஏனையவை :**
- இலக்கியப் பணியின் இலக்கு 30
- அந்தனி ஜீவாவுக்குக் கௌரவம் 20
- பெண்ணியம் 34
- யாழ் விருது நாயகன் 38
- பெண்ணின் அழகுதரும் இன்பம் 42

**உங்கள் விருந்து** 48

பேனா முனையிலிருந்து....



# மனநோயாளர்களின் பெருக்கம்

இன்று உலகெங்கும் வாழும் மக்களில் ஒரு பகுதியினர் ஏதோ ஒருவித மனநோயால் பாதிக்கப் பட்டவர்களாக வாழ்ந்துகொண்டிருப்பது கண்கூடு. உலகில் முப்பது கோடி மக்கள் மனநலம் குன்றியவர் களாகவும் வருடத்துக்கு எட்டு இலட்சம் மக்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் அண்மையில் கிடைத்த புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. யுத்தத்தின் தாக்கம், இயற்கை அனர்த்தங்கள், ஆயுதக் கலாசாரத்தின் தாக்கங்கள், வீடுவாசல்களை விட்டு பயம் காரணமாகப் புலம்பெயர்வு, அகதி வாழ்க்கையின் அவலங்கள், வறுமையின் தாக்கம் போன்றவை பொதுவாக உலக நாடுகளில் வாழும் மக்களை உளரீதியாகப் பாதித்துள்ள காரணிகள் என்று கூறினாலும் வேறும் பல சம்பவங்களாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நமது நாட்டைப் பொறுத்தளவில்பலவகைப்பட்ட கவலைகள், துன்பங்கள் வேதனைகளால் மக்கள் மனநலம் குன்றியவர்களாகின்றனர். வேலையில்லாப் பிரச்சினை, குடும்பத்தகறாறுகள், பரீட்சையில் தோல்வி, காதலில் தோல்வி, வறுமையும் வாழ்வாதாரப் பிரச்சினையும், கடன்தொல்லை, பிறரால் ஏமாற்றப்படுதல், அவமதிக்கப்படுதல், வியாபாரத்தில் நஷ்டம், பயப்பீதி போன்ற காரணங்களால் பலர் மனநலம் குன்றிக் காணப்படுகின்றனர். அதேவேளை தற்கொலைகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

சிறுவர்களைப் பொறுத்தளவில் துன்புறுத்தப்படுவதாலும், தண்டனைகளை வழங்குவதாலும், மனதைப் பாதிக்கும்படியான பேச்சுக்களாலும், சிறுவர் துஷ்பிரயோகங்களாலும், வறுமை கரரணமாகவும், ஆதரவற்ற நிலையாலும், கல்வியைத் தொடரமுடியாத ஏக்கத்தினாலும் பலர் மனநலம் பாதிக்கப்பட்டி ருக்கிறார்கள். இளைஞர்கள் யுவதிகளைப் பொறுத்தளவில் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றத்தைக் கொடுக்கும் போது அவை அவர்களைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. மேலும் வெளிநாடுகளில் வாழுகின்ற எமது தமிழ் இளைஞர்கள் எமது நாட்டுப் பெண் பிள்ளைகளை ஏமாற்றி திருமணம் செய்து அவர்களை நட்டாற்றில் விட்டுவிடும் சம்பவங்கள் அரங்கேற்றம் கண்டு வருவது சோதனை மேல் சோதனை. இதனால் பல தமிழ்ப் பெண்கள் தமது வாழ்வைத் தொலைத்த நிலையில் மன அழுத்தம் காரணமாகப் பாதிக்கப் பட்டுள்ளார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை மோகம் எத்தனை பெற்றோர்களையும் பெண்களையும் மனநோயாளராக்கியுள்ளமை கண்கூடு. மணமுறிவுகள்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. கணவனை விட்டு மனைவி வேறு ஆடவனுடன் ஓடிவிட்டாள் என்ற செயற்பாட்டினால் அவமானம் தாங்கமுடியாமல் வேதனைப்பட்டு மனநோயாளியாவதும், கணவன் தன்னையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டு வேறு பெண்ணை நாடிச் சென்றுவிட்டானே என்ற ஏக்கத்தில் மனநலம் பாதிக்கப்படுவதும் சாதாரண நிகழ்வாக மாட்டாது.

இலங்கையைப் பொறுத்தளவில் குறிப்பாக தமிழ்ச் சமுதாயம் வயதுபோனவர்களை மதிக்கத் தவறியமையால் பல முதியவர்கள் மனநலம் குன்றியவர்களாக இருக்கின்றார்கள். பிள்ளைகளால் அனாதரவாக்கப்பட்ட பெரியோர்களின் நிலை பரிதாபத்துக்குரியது. அகதிமுகாம்களிலும், அனாதை இல்லங்களிலும், முதியோர் இல்லங்களிலும் விடப்பட்ட முதியவர்களில் பெரும்பாலானவர்கள் தம்மைக் கவனிக்க எவரும் வரமாட்டார்களா என்ற ஏக்கப் பெருமூச்சுடன் ஆதரவற்ற நிலையை உணர்ந்தவர் களாக ஏங்கி ஏங்கி மனநோயாளர்களாகிக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்தம் காரணமாக கணவனை இழந்து விதவைகளாக்கப்பட்ட பெண்கள் எதுவித ஆதரவுமற்ற நிலையில் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்ட பெரும்பாலானவர்கள் ஏதோ ஒருவிதத்தில் மனநலம் குன்றியவர்களாகவே காணப்படுகின்றனர். எமது சமுதாயத்தைப் பொறுத்தளவில் புலப்பெயர்வு, இடப்பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை, சொந்தக்காணியில் வாழமுடியாத ஏக்கம், காணாமலாக்கப்பட்ட பிள்ளைகளை நினைத்து வருந்துதல், கடன் தொல்லைகள் போன்ற காரணங்களால் பலர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு நாடு திரும்பினாலும் மனநோயாளராகவே உள்ளனர். இவற்றுக்கான தீர்வு என்ன? அரசாங்கமும் பொது அமைப்புக்களும் தம்மாலான செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் தனிமனிதன் ஒவ்வொருவரும் வாழ்வாங்கு வாழ்ந்தால் ஓரளவுக்காவது மக்கள் நலனைப் பேணலாமல்லவா?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**- ஆசிரியர்**

# தெள்ளு தமிழ்க் காவியம் தேம்பாவணி தந்த வீரமாமுனிவர்

வாகரைவாணன்



தமிழைச் சமயங்கள் வளர்த்தன. சமயங்களைத் தமிழ் வளர்த்தது. தமிழ் இலக்கிய வரலாறு தரும் தரவுகளில் இதுவும் ஒன்று. பிற்காலச் சங்க இலக்கியங்களோடு பிறந்த தமிழ் - சமயக் காதல் எவ்விதத்தொய்வுமின்றி இன்றுவரை நமது தமிழ் இலக்கியங்களில் தொடர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். தேம்பாவணி - இக்காதலின் செழுமையான ஓர் அடையாள மாகத் திகழ்கின்றது.

ஆசையே துன்பத்தின் அடிப்படை என்றான் ஆசியஜோதி. ஆனால், இன்றைய உளவியலாளர்கள் ஆசையே ஒருவனை இயக்கும் சக்தி என்பர். முற்றும் துறந்த முனிவரான தேம்பாவணி ஆசிரியரையும் முத்தமிழ் ஆசை முழுமையாகவே ஆட்டிப் படைத்திருக்கிறது. அதன் விளைவுதான் இந்தத் தேம்பாவணி என்னும் தெள்ளுதமிழ்க் காவியம். இதனை 'ஆசையுற்று ஊமனேனும் அருங்கதை அறையலுற்றேன்' என்னும் பாடல் அடியே எடுத்துக் காட்டும்.

தத்துவபோதகரால் தரப்பட்ட தமிழ் வசன நடையைச் செழுமையாக்கி உலவவிட்ட வீரமா முனிவர் (1680-1747) 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1727இல்) தமது கவித்துவச் சிறப்பால், தமிழ் அன்னையின் மார்பில் சூட்டி மகிழ்ந்த வாடாமாலையே தேம்பாவணி என்னும் தேனினும் இனிய காவியம்.

தேம்பாவணி என்னும் தொடர்மொழியை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று தேம்பா + அணி. மற்றது தேன் + பா + அணி. முதல் இரு சொற்களும் வாடாத மாலை எனும் பொருளை உணர்த்த, மற்ற மூன்று சொற்களும் தேன்போன்ற பாக்களால் தொடுக்கப்பட்ட மாலை என்னும் அர்த்தத்தைத் தருகின்றன.

காவியத்தின் உரிப்பொருளாக இருப்பது கிறிஸ்து பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய வளன் என்னும் சூசை மா முனிவரின் வரலாறாகும். இதனை 'வேரியங்கொடியோன் காதை தேம்பாவணியெனப் பிணித்தல் செய்வாம்' என்னும் பாயிரம் 13ம் செய்யுளால் நாம் அறியலாம். 36 படலங்களையும் 3615 பாடல்களையும் கொண்ட இக்காவியம். 3 காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இப்பகுப்புமுறை யாரால் மேற்கொள்ளப்பட்டதென்று தெரியவில்லை.

தண்டி ஆசிரியரின் காவிய இலக்கணத்தைத் தலைமேற்கொண்ட வீரமாமுனிவர் தமிழ் இலக்கிய மரபில் இருந்து சற்றும் தடுமாறாமல் நாடு, நகர வளங்களையெல்லாம் நயம்பட எடுத்துக் கூறி அவற்றின் ஊடாக, சூசையப்பர் வரலாற்றைச் சொல்லும் திறன் போற்றத்தக்கது. இடையிடையே குழந்தை யேசுவின் பிறப்பு, பெயர் சூட்டுதல். ஏரோதனுக்கு அஞ்சி எகிப்து ஏகல் போன்ற கிறிஸ்து யேசுவின் வரலாறு தொடர்பான நிகழ்வுகள் அழகுற எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

இறுதியாக, வியாதியில் வீழ்ந்த சூசைமாமுனிவர் இறந்துபின் உயிர்த்தெழுவதாக, இக் காவியத்தை இனிது நிறைவு செய்கிறார் நமது இத்தாலி நாட்டுத் தமிழ்க்கவிஞர்.

தேம்பாவணி இயற்றப்படுவதற்கு முன்பு, தமிழ் உலகில் தன்னிகரில்லாக் காவியங்களாகத் திகழ்ந்தவை இரண்டு. ஒன்று திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணி. மற்றது கவிச்சக்கரவர்த்தி கம்பரின் இராமாயணம். இவ்விரண்டு காவியங்களிலும் தம் இதயத்தைப் பறிகொடுத்தவர் வீரமாமுனிவர் என்பதை அக்காவியத்தை ஆழ்ந்து கற்பவர்கள் அறிவர். காட்டாக, இரண்டு பாடல்களை இங்கே காட்டலாம்.

ஜனக மகாராசனின் மகள் ஜானகியை மணம் புரிவதற்காக அவன் அரண்மனையில் கிடந்த வில்லைக் கையில் எடுக்கிறான் அயோத்திராமன்

இதனை -

*தடுத்திமையாமல் இருந்தவர் தாளின்*
*மடுத்ததும் நாண் நுதி வைத்ததும் நோக்கார்*
*கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்*
*எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்*

என்று கம்பன் சுவைப்படச் சொல்லுவான்.

கம்பனை மாந்தித் திளைத்த வீரமாமுனிவர், தமது காவியத்தின் ஓரிடத்தில் கம்பனை ஒட்டியே இவ்விதம் கவிதை பாடுவார்.

*கல்லை ஏற்றலும் கவணினைச் சுழற்றலும் அக்கல்*
*ஒல்லை ஓட்டலும் ஒருவரும் காண்கிலர் இடிக்கும்*
*செல்லை ஒத்தன சிலை நுகல் பாய்தலும் அன்னான்*
*எல்லை பாய்ந்திருள் இரித்தென வீழ்தலும் கண்டார்.*

இதனைப் போன்றே கம்பராமாயணம் தோன்றுவதற்கு முன்பு அனைத்துத் தமிழ் நெஞ்சங்க ளாலும் அள்ளிப் பருகப்பட்ட சீவகசிந்தாமணி என்னும் செஞ்சொல் காவியத்தில் தன் சீவனையே வைத்திருந்த முனிவர் பெருமான் திருத்தக்க தேவரின் கற்பனை வளத்தில் மட்டுமல்ல, அவரது செஞ்சொற்களையும் கடன் வாங்கத் தவறவில்லை. இதற்குக் காட்டாக இங்கே ஒரு பாடலைக் குறிப்பிடுதல் தகும்.

*தூமஞ் சூடிய தூத்து கிலேந்தல் குல்*
*தாமஞ் சூடிய வேற்றடங் கண்ணினாள்*
*நாமஞ் சூடிய நன்னுதல் நீட்டினாள்*
*காமஞ் சூடிய கண்ணொளிச் சுண்ணமே.*

சமண முனிவர் தேவரின் இந்தப் பாடலை அப்படியே சார்ந்து எங்கள் கிறிஸ்தவ முனிவர் இப்படிப் பாடுகின்றார்.

*தூமஞ் சூடிய தூய் துகிலேந்து பு*
*தாமஞ் சூடிய தாரொடு பூண்மலி*
*காமஞ் சூடிய காந்தரி யென்றொரு*
*நாமஞ் சூடிய நாரியைக் கண்டுள்ளார்.*

அணிகளால் அழகுபெறுவது இலக்கியம். தண்டி ஆசிரியர் தமிழுக்குத் தாராளமாகத் தந்த இந்த அணிகளை வீரமாமுனிவரும் தம் காவியத்தில் ஏராளமாகப் பயன்படுத்துகின்றார்.

எந்த ஒரு இலக்கியத்திலும் ஏதோ ஓர் இலக்கு (குறிக்கொள்) இருக்கும். இலக்கு என்னும் சொல்லில் இருந்து பிறந்ததுதான் இலக்கியம் என்னும் சொல். எனவே இலக்கு இன்றி இலக்கியம் இல்லை. காவியக் கவிஞரான வீரமாமுனிவரும் உயர்ந்ததோர் இலக்கினை வைத்தே தமது காவியத்தை உருவாக்கியிருக்கின்றார். அந்த இலக்கு 'வளன்தன் காதை அற முதல் விளங்கச் செய்வாம்' என்று முனிவரின் வாயிலிருந்தே வெளிவருகின்றது.

காவியத்தின் ஊடாக ஏதோ ஒரு கதையை மட்டும் சொல்வது முனிவரின் நோக்கமல்ல.அவர் உண்மையில் சொல்ல விரும்பியது கிறிஸ்தவ அறம்.அதற்குக் காவியம் ஓர் அற்புதமான கருவி. இந்தக் கருவியை வீரமாமுனிவருக்கு முன்பும் பின்பும் கவிஞர் பெருமக்கள் சிலர் சிறப்பாகவே எடுத்தாண்டிருக்கிறார்கள். மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் தமது காவியத்தின் ஊடாகப் பௌத்த மதக் கருத்துக்களை வாரி வழங்கியது போல சைவமதச் சிந்தனைகளை எடுத்துச் சொல்ல பெரிய புராணத்தைச் சேக்கிழார் சரியாகப் பயன்படுத்தியது போல - வீரமாமுனிவரும் தம் மதக் கருத்துக்களை வெளியிடத் தேம்பாவணியை ஒரு கருவியாகக் கொண்டார். உதாரணத்திற்கு ஒன்று.

'கன்னிமை கெடாது தேவதாய் கர்ப்பம் தரித்தாள்' என்பது கிறிஸ்தவ விசுவாச சத்தியங்களில் ஒன்று. விசுவாசம் அல்லாதவர்களுக்கு, இக்கூற்று விசித்திரமாகவே இருக்கும். ஆனால் கிறிஸ்தவ விசுவாச சத்தியங்களில் அசையாத நம்பிக்கை கொண்ட யேசுசபைத் துறுவியான வீரமாமுனிவர், அழகான உவமை அணி மூலம் அக்கருத்தினை நயம்பட இவ்விதம் விளக்குகிறார்.

*வாய்ப்படா நுழை பளிங்கின் வாய் கதிர்*
*போய்ப்படாவொளி படரும் போன்றுதாய்*
*நோய்ப்படாது அருங்கன்னி நூக்கிலா*
*காய்ப்படா வயத்து அமலன் தோன்றினான்"*

கடிய நடையில் வீரமாமுனிவர் தம்காவியத்தைப் படைத்திருக்கிறார் என்பது உண்மை தான். இதற்குக் காரணங்கள் இருக்கின்றன.அவற்றில் ஒன்று வீரமாமுனிவர் வாழ்ந்த சூழ்நிலை. மற்றது அந்நிய தேசத்தவரான அடிகளார் தமது காவியத்தில் எத்துணை இலக்கணக் குற்றமும் இருக்கக் கூடாது என நினைத்தமையால் யாப்பிலக்கணத்தை மிக மிக அவதானத்தோடு பின்பற்றியமை இந்த உண்மையைப் புரிந்துகொண்டும் காழ்ப்பு உணர்வு காரணமாகத் தமிழ் அறிஞர் சிலர் தேம்பாவணியை வீரமாமுனிவர் இயற்றவில்லை என்றுகூற முற்படுதல் வேதனைக்குரியதாகும்.

பொன்னாடையையோ, பூமாலையையோ, கனவிலும் கருதாது தனது மறைக்கும் தான் விரும்பிய தமிழ் மொழிக்கும் அளப்பரிய தொண்டாற்றிய இத்தாலி நாட்டு யேசுசபைத் துறவி

வீரமாமுனிவரைத்தமிழ்க் கத்தோலிக்க உலகம் பாராட்டிக் கௌரவித்தல் அதன் பெரும் கடமையாகும். இதனை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே நன்குணர்ந்துகொண்ட மட்டக்களப்பு வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் 1968ம் ஆண்டில் மட்/மாநகரசபை மண்டபத்தில் 'வீரமாமுனிவர் விழா' என்னும் மகுடத்தில் மாபெரும் விழா எடுத்துச் சிறப்பித்தது. இதுவே கிழக்கிலங்கைத் தமிழகத்தில் இடம்பெற்ற முதலும் இறுதியுமான விழாவுமாகும்.

ஈடிணையில்லாத இத்தாலி நாட்டுத் தமிழ் இலக்கிய இலக்கணப் பேரறிஞருக்கு நன்றி உணர்வோடு எடுக்கப்பட்ட இந்த விழா கம்பன் விழா போலத் தொடர்ந்து நடைபெற இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபை கைகொடுக்க வேண்டும் என்பது தமிழ் இலக்கிய ஆர்வலர்களின் விருப்பமும் வேண்டுகோளுமாகும். ●

விளையாட்டு

# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் யாழ் நங்கை அனிதாவின் "தேசிய சாதனை"

விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து விளையாட்டுத்துறைத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த 43ஆவது தேசிய விளையாட்டுப் பெருவிழா 2017 செப்டெம்பர் 22ஆம் திகதி மாத்தறை கொடவில விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு Jaffna Vaulting Queen அனிதா ஜெகதீஸ்வரன் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கோலூன்றிப் பாய்தல் (பெண்கள் பிரிவில்) 3.48 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து தங்கப் பதக்கத்தினை வென்றதுடன் அகில இலங்கைச் சாதனை ஒன்றினையும் ஏற்படுத்தியுள்ளார். முதலாண்டில் அவர் தேசிய மெய்வல்லுநர் போட்டியில் ஏற்படுத்திய தமது சாதனையை விஞ்சி, புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். அவரது முன் னைய சாதனை 3.47 மீற்றராகும். தனது அடுத்த இலக்கு 3.50 என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




அனிதா தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் மாணவியும் தற் பொழுது சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் "விளையாட்டுத்துறை முகாமைத்துவ"ப் பட்டப் படிப்பினை மேற்கொண்டுள்ளவருமாவார்.

எதிர்காலத்தில் அவர் கல்வித்துறை யிலும் விளையாட்டுத் துறையிலும் மேன் மேலும் சாதனைகளைப் புரிந்துபெருமை பெற வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றோம்.

- கதிரவேலு மகாதேவா

சிவநித்திலன்

# பஸ் பயணமும் நினைவலைகளும்

வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படும் பஸ்சில் ஏறி அமர்ந்துகொள்கின்றேன். சற்று நேரத்தில் ஒரு பெரியவர் எனது ஆசனத்திற்குப் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டு எடுத்து வந்த சிறிய பெட்டியொன்றை சீற்றுக்குக் கீழ் வைத்துவிட்டு என்னைப் பார்த்து "யாழ்ப்பாணமோ" என்று கேட்டார். நான் தலையை ஆட்டினேன். அவர் சிரித்தார். பதிலுக்கு நானும் சிரித்தேன்.

"உங்களை எனக்குத் தெரியும்" என்றார். உண்மையிலேயே அந்தப் பெரியவரை எனக்குத் தெரியாது. "என்னை உங்களுக்கு எப்படித் தெரியும், நீங்கள் யார் என்று சொல்லுங்கள்" என்றேன்.

"என்னை உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. சிலவேளை மறந்திருக்கலாம். நீங்கள் உதயன் பத்திரிகை நிறுவனத்தில் முகாமையாளராகக் கடமையாற்றியபோது அங்கு பொது முகாமையாளராகச் சேவையாற்றிய திருச்சிற்றம்பலம் ஐயாவைச் சந்திக்க வந்தபோதுதான் உங்களைச் சந்தித்தேன்." என்றார்.

முப்பது வருடங்களுக்குமுன் கண்ட என்னை ஞாபகத்திலே வைத்திருக்கின்றாரே என்று நினைக்க அதிசயமாக இருந்தது.

"ஐயா, உங்களை எனக்கு ஞாபகத்தில் இல்லை. மன்னிச்சுக் கொள்ளுங்கோ" என்றேன்.

"திருச்சிற்றம்பலம் ஐயாவைச் சந்திக்க வரும் போது நீங்கள் அவருடன் கதைத்துக் கொண்டு இருந்துவிட்டுச் சென்றதும்... உங்களைப் பற்றி ஐயா சொன்னது பெரிய அதிசயமாக இருந்தது. அதுதான் இன்றும் என்னால் மறக்க முடியாத செய்தியாக இருக்கின்றது."

"கேட்கக் கூடாதுதான், இருந்தாலும்கேட்க வேண்டும் போல் இருக்கிறது" என்றேன்.

"ஒரு வருடத்தில் ஐந்து பதவிகளை முறையாக வழிநடத்தி அதிஉயர் பதவியைப் பெற்றவர் என்றும், எதையும் துணிவுடன் செய்யும் ஆற்றல் கொண்டவர் என்றும் சொல்லியுள்ளார். சமுதாயத்தால் பெரிதும் மதிக்கப்பட்ட நேர்மையான ஒரு மனிதரின் வாயால் இப்படியான நல்வார்த்தைகளைப் பெறுவது மிகமிகக் கஷ்டம். ஆனால் உங்களுக்கு... அதனால்த்தான் உங்களை மறவாமல் நினைவில் வைத்திருக்கின்றேன்" என்றாரே பார்க்கலாம்.

எனக்கு அவர் சொன்னதைக் கேட்டதும் திருச்சிற்றம்பலம் ஐயாவின் நினைவு என்னை வந்து வாட்டியது. அவர் இப்பொழுது உயிருடன் இல்லை. பழைய நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றேன். நான் 1987 இல் ஐயாவைச் சந்திக்க சுன்னாகத்திலுள்ள அவர் வீட்டுக்குச் சென்றேன். ஐயாவும் மங்கையர்கரசி அம்மாவும் இன்முகத்தோடு வரவேற்று பலகாரமும் தேநீரும் தந்து உபசரித்தனர். வீடு திரும்பும்போது தங்கள் வளவில் உள்ள முருங்கை மரத்தில் உள்ள முருங்கைக்காய்களையும் தந்துவிட்டனர். "உங்கள் மனைவியையும் கூட்டிக்கொண்டு வரும் வெள்ளிக்கிழமை மத்தியானச் சாப்பாட்டுக்கு வரவேண்டும்" என்று கட்டளையும் இட்டனர்.

அவர்கள் சொன்னபடி என் மனைவியையும் அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குச்

சென்றேன். பல வகையான கறிகளுடன் மதிய உணவை இரசித்து உண்டோம். இருவரும் பக்கத்தில் நின்று பரிமாறிக் கொண்டே இருந்தார் கள். பெரிய மனிதர்களின் முன் பயபக்தியுடன் ஒன்றுமே சொல்ல முடியாமல் மௌமான இருந்து சாப்பிட்டோம். சாப்பாட்டு முடிந்தபின் அமர்ந்திருந்து மாலைதீவு புதினங்களைப் பற்றிச் சொன்னேன். சிறிது நேரம் இருந்து கதைத்து விட்டுப் புறப்பட ஆயத்தமானோம். ஐயா ஒரு பார்சலைக் கொண்டுவந்து தந்து "எனக்கு இந்தியாவிலிருந்து ஒரு நண்பர் இந்த வேட்டியைக் கொண்டு வந்து தந்தவர். அதை உங்களுக்குத் தாறன்" என்று சொல்லித் தரும் போது மறுப்பின்றி வாங்கிக் கொண்டேன். என்னுடன் அளவில்லாத அன்பைப் பொழிந்த அந்தப் பெருமகனாரை நினைத்துப் பார்க்கும் போது... என்னையறியாமலே என் கண்கள் பனித்துவிட்டன.

"என்ன தம்பி நித்திரையோ?"

"இல்லை ஐயா, திருச்சிற்றம்பலம் ஐயா வின் நினைவு வந்ததனால் மௌமாகிவிட்டன்"

"உண்மையிலே அந்த மனுசன் பெரிய மனுசந்தான் தம்பி"

பஸ்சில் உள்ள தொலைக்காட்சியில் படம் ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் படத்தை பார்த்துக் கொண்டிருந்த பெரியவர்..

"வழமையாக வரும் சினிமாப் படங்க ளைப் போலல்லாமல் இந்தப் படம் வித்தியாசமாக இருக்கின்றதே! அதுவும் இவ்வளவு காலமும் காணாத புதுமுகங்களாகவும் இருக்கின்றார் களே" என்றார்.

அப்பொழுது தான் என் கவனமும் அங்கு திரும்பியது. உண்மையிலேயே அப்படம் ஒரு புதுமையான படம் தான். கிராமப்புறச் சூழலிலே ஏழைக்குடும்பத்தில் பிறந்த ஓர் பெண் பிள்ளை படிக்க வேண்டும் என்ற ஆவலுடன் பாடசாலைக் குச் சென்று வருவதில் ஏற்படும் இடர்பாடுகளை மிகவும் தத்ரூபமாக படம் வெளிக்காட்டியது. இடையிலே 'இலை' படம் தொடரும் என்று போட் டுக் காட்டிய போதுதான் படத்தின் பெயர் 'இலை' என்று தெரிய வந்தது. உண்மையிலேயே ஒரு வித்தியசமான படமாகத்தான் எனக்கும் புரிந் தது. உள்ளத்தைத் தொடும் வகையில் இயக்குநர் சிறிய சிறிய விடயங்களை மிக நுட்பமாக வெளிக் கொணர்ந்த விதம் உண்மையிலேயே பாராட்டுக் குரியது.

படக்கொப்பி சரியில்லாதபடியாலோ அல் லது என்ன காரணமோ தெரியவில்லை படத்தை இடையில் நிறுத்திவிட்டார்கள். அதனால் படத்தை முழுமையாகப் பார்க்க முடியவில் லையே என்ற கவலை இருந்ததும் உண்மை தான்.

பஸ்சின் யன்னல் ஓரமாக இருந்த நான் கண்ணாடிக் கதவைச் சற்றுத் திறந்து வெளியில் பார்க்கின்றேன். அனுராதபுரம் ரூவான்வெலிசா யாவை அண்மித்ததும் அந்த வெள்ளை நிற டகோபாவும் ஆயிரங்கால் மண்டபமும் என் கண் களுக்கு விருந்தாகின. பழைய நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றேன்.

1971ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கிளை அலுவலகம் அநுராத புரத்தில் திறக்கப்பட்டபோது அங்கு கடமைக்காக வருகை தந்த ஒன்பது பேரில் நானும் ஒருவன். அங்கு இன, மத வேறுபாடின்றி எல்லோரும் ஒரு குடும்பமாகவே இருந்து எமதுகடமைகளைச் செய்து வந்தோம். எல்லோருமாகச் சேர்ந்து அனுராதபுரத்திலுள்ள விகாரைகள், கோவில்கள், தேவாலயங்களுக்கெல்லாம் சென்று வருவோம். இரண்டு சிங்கள நண்பர்களுடன் சேர்ந்து நானும் எனது நண்பர் தங்கரத்தினமும் துவிச்சக்கர வண்டிகளில் கிராமப்புறங்களைப் பார்க்கச் சென்று வருவோம். கிராமப்புற மக்கள் எங்களை அன்புடன்வரவேற்று குடிக்க இளநீரும் சோளன் பொத்தியை அவித்துச் சாப்பிடத் தருவார்கள். வஞ்சகமில்லாத அந்த ஏழைக் கிராம மக்களைத் தரிசிப்பதில் அலாதியான

விருப்பம் இருந்தது. விவேகானந்தா கல்லூரி, கதிரேசன் கோயில், குளக்கரைப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றை அண்டி விவேகானந்தா சொசயிற்றி இருந்தது. அங்கு அறைகள் வாடகைக் குக் கொடுத்திருந்தார்கள். நானும் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அங்கேயே சாப்பாடும் சாப்பிட்டுக்கொண்டு தங்கியிருந்து துவிச்சக்கர வண்டியில் அலுவலகத்திற்குச் சென்று வருவேன். திருவிழாக்கள் நடக்கும் நாட்களிலும் பூசைகள் நடக்கும் வேளைகளிலும் கதிரேசன் கோயில் ஐயரும், பிள்ளையார் கோயில் ஐயரும் எனக்குப் பிரசாதம் கூப்பிட்டுத் தருவார்கள். பெரிய தேவாலயத்தில் ஞானப்பிரகாசர் என்ற அருட் தந்தை இருந்தார். அவர் ஞாயிறு ஆராதனைகள் முடிந்ததும் நல்ல தமிழில் திருக்குறள், சிலப் திகாரம் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு கருத்தாளம்மிக்க சொற்பொழிவுகளை ஆற்றுவார். அவரது சொற் பொழிவுகளைக் கேட்க ஒவ்வொரு ஞாயிறும் பெரிய தேவாலயத்திற்குச் செல்வேன்.

தமிழ் முஸ்லிம் சகோதரர்கள் சேர்ந்து ஒரு கலைச்சங்கத்தை நிறுவி கவியரங்குகள் இலக்கி யச் சந்திப்புக்களை மேற்கொள்வோம். அச்சங்கத் தில் அன்பு ஜவார்சா, பேனா மனோகரன் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசாங்க அலுவலர் களும் இணைந்து செயற்பட்டு வந்தோம்.

நண்பர்களுடன் சேர்ந்து ஆற்றில் சென்று குளித்துக் குதூகலிப்போம். எமது அலுவலகத்தில் வரிமதிப்பாளராகக் கடமையாற்றிய அருமைநாயம் அவர்கள் குடும்பத்துடன் அங்கு வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்தார். நானும் தங்கரத்தின மும் வசதியான நாட்களில் அவரின் வீட்டுக்குச் சென்று வருவோம். அவருடைய மனைவியார் மோதகம், வடை, எள்ளுறுண்டை என்று சாப்பிடத் தருவார். கொடுப்பதில் இருவருமே சளைத்தவர் களல்ல. எனது வாலிபக் காலத்தில் அநுராதபுர வாழ்க்கை மகிழ்ச்சியாகவே கழிந்தது. அநுராத புரத்திலிருந்து மீண்டும் கொழும்புக்கு வந்து எனது கடமையைச் செய்யலானேன்.

பஸ் அநுராதபுரம் கடந்து மதவாச்சியில் யாரோ ஒருவர் இறங்குவதற்கு நின்று மீண்டும் வவுனியாவை நோக்கிப் புறப்பட்டது. காட்டுப் பகுதியில் பஸ் மீண்டும் நிறுத்தப்பட்டது. என்ன காரணம் என்று எட்டிப் பார்த்தேன். இரண்டு பொலிசார் முன்னுக்கு நின்றார்கள். பஸ்சின் சாரதி ஒரு பைல் உடன் பஸ்சை விட்டு இறங்கிச் சென்று பொலிசாரிடம் பைலைக் காட்டி ஏதோ கதைக்கின்றார்.

பக்கத்திலிருந்த பெரியவர் நித்திரையில் இருந்து எழுந்து "ஏன் தம்பி காட்டுக்குள் பஸ் நிக்குது. ஏதாவது பழுதுபட்டுப் போச்சோ"

"இல்லை ஐயா பொலிஸ் மறிச்சுப் போட்டுது"

"அவையளுக்கும்வேலை வேண்டு மல்லே. அதுதான் இடைக்கிடை மறிப்பினம் போல"

பஸ் மீண்டும் காப்பற் நோட்டிலே ஓடிக் கொண்டிருந்தது. எனது எண்ணங்களும் ஓடிக் கொண்டிருந்தது. அனுராதபுரத்தில் எங்களுடன் ஒரு சகோதரனாகப் பழகி அன்புடன் இருந்த அருமைநாயம் அவர்கள் 1983 இல் நடந்த இனக் கலவரத்தில் காருடன் எரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் எனது மனதை வாட்ட கண்களை மூடி நித்திரை கொள்ள முனை கின்றேன்.

நித்திரை வருவதாக இல்லை. பக்கத் திலிருந்த ஐயா ஆழ்ந்த நித்திரையில் இருப்பதா கத் தெரிந்தது.

"வவுனியாவில் இறங்கிறவை முன்னுக்கு வாங்கோ" என்று நடத்துநர் சொல்வது கேட்டு வவுனியாவை நெருங்கிவிட்டோம் என்று தெரிந்தது. நேரத்தைப் பார்க்கின்றேன். காலை 2.30 என்று கைக்கடிகாரம் காட்டுகிறது.

நாளைக் காலை முத்தமிழ்விழாவுக்குச் சிறப்பு அதிதியாகச் செல்லும் நான் அங்கு பேசவும்

வேண்டும் என்ற சிந்தனையில்... சற்று உறங்கலாம் என எண்ணி கண்களை மூடிக்கொண்டு படுத்திருக்கின்றேன்.

"முருகண்டி கோயிலுக்குப் போறவர்கள் இறங்கிச் சென்று சீக்கிரம் வந்துவிடுங்கோ" என்று நடத்துநரின் சத்தம் கேட்டு நானும் பஸ்சிலிருந்து கீழே இறங்குகின்றேன். எனக்குப் பக்கத்திலிருந்த பெரியவரும் இறங்கிக் கோயிலுக்குச் செல்லுகிறார். நானும் காலாற நடந்து வேறு பஸ்களில் வந்தவர்கள் இறங்குவதைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றேன். என்னுடன் முன்பு கொழும்பில் வேலை செய்த பியசேனாவைக் கண்டு இங்கு வருவதற்கான காரணத்தை விசாரிக்கின்றேன்.

தனது மகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் படிப்பதாகவும் மகளைப் பார்க்கும் சாட்டில் குடும்பத்துடன் 'நாகதீப' போவதற்கு வந்ததாகவும் சிங்களத்தில் சொன்னார். பியசேனாவின் கல்யாண வீட்டுக்கு மாத்தறைக்குப் போய் வந்த ஞாபகமும் எங்களை அவரின் குடும்பத்தவர்கள் அன்புடன் உபசரித்ததையும் எனது மனதில் தோன்ற பழைய எண்ணங்கள் ஞாபகத்துக்கு வந்தது.

நான் வந்த பஸ் பயணத்தை தொடங்க ஆயத்தமானது. பஸ்சில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். பெரியவர் திருநீற்றுப் பூச்சுடன் சந்தனப் பொட்டுடனும் வந்து அமர்ந்து கொண்டார். பஸ் தனது பயணத்தை ஆரம்பித்தது.

"அம்மா வரவில்லை" என்று ஒரு பெண் பிள்ளையின் சத்தம் கேட்டது.

பஸ் நிறுத்தப்பட்டது. "பிள்ளை இறங்கணே! பஸ்சைத் தெரியாமல் ஏறி எங்களை யேன் உபத்திரவப்படுத்துகிறாய்" என்று நடத்துநர் சொல்ல அந்தப் பிள்ளைமேல் பரிதாபம் ஏற்பட்டது.

"இறங்கி நீர்வந்த பஸ் அங்க நிக்குது அதில் போய் ஏறும் " என்று நடத்துநர் சொனதும் பிள்ளை தான் வந்த பஸ்சை நோக்கி பயத்துடன் ஓடுகிறது. பஸ் ஓட்டுநர் கோணை அடித்தபடி பஸ்சை ஓட்டுகிறார். பஸ்சுக்குள் இருந்த எல்லா லயிற்றும் நூக்கப்பட்டு ஒரு லயிற் மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

பெரியவருக்கு நித்திரை வரவில்லைப் போலும். "முருகண்டியானிடம் மக்களுக்கு முந்தியிருந்த பயமும் பக்தியும் இப்ப இல்லை போல. முந்தி ஓலைக் கொட்டிலுக்குள்ள முருகண்டியான் இருக்க ஒருவித பயமும் பக்தியும் நம்பிக்கையும் இருந்தது உண்மை தான். அந்தக் காலத்தில் இதால போற வாற வாகனங்கள் எல்லாம் நிறுத்தப்பட்டு வந்தவர்கள் தேங்காய் உடைச்சு கற்பூரம்கொளுத்திக் கும்பிட்டு விட்டுத்தான் போவர்கள். இப்ப அநேகமான வாகனங்கள் நிறுத்தாமல் போய்க் கொண்டிருக்கின்றன. எல்லாம் 'கலியுக காலம்" என்றார்.

நானும் அவர் சொல்வதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

கிளிநொச்சி, பரந்தன், பளை, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, அரியாலை, கச்சேரியடி என்ற இடங்களில் பஸ்சில் வந்தவர்கள் இறங்குகின்றார்கள். பஸ் ஒருவாறு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து விட்டது. எல்லோரும் பஸ்சை விட்டு இறங்குகிறார்கள். நான் இணுவிலில் இறங்குவதற்காக பஸ்சில் இருக்கின்றேன். என்னுடன் பஸ்சில் வந்த பெரியவரும் இறங்காமல் இருக்கிறார்.

"ஐயா இப்பவாவது நீங்கள் யாரென்று சொல்லமாட்டீர்களா? என்றேன்.

"உம்மால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன்"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.


"நான் என்னையா உங்களுக்குச் செய்தனான்."

"அந்த நேரம் சுன்னாகத்தில் உதயன் பத்திரிகை முகவர்களாக வருவதற்கு மூன்று விண்ணப்பங்கள் அனுப்பட்டதாம். அதை வந்து பார்த்துப் பரிசீலனை செய்வதற்கான பொறுப்பை பொதுமுகாமையாளர் உங்களிடம் ஒப்படைத் திருந்தாராம். நீங்கள் வந்து பார்த்து கந்தையா கடையைச் சிபாரிசு செய்தபடியால் எனக்குக் கிடைக்கவில்லை. நான் திருச்சிற்றம்பலம் ஐயா விடம் சென்று உங்கள் மைத்துனராக இருக்கும் எனக்குத் தராமல் கந்தையா கடைக்குக் கொடுத்தது ஏன் என்று கேட்டேன்.

"சிவாவின் தீர்மானம் நேர்மையானது என்பதை நீங்களும் உணர்ந்து சொல்லுவீர்கள்" என்று ஐயா தெரிவித்த போதும் உடன்பாடு இல்லாமல் இருந்தேன். ஓரிரு மாதங்களில் உண்மை நிலையை அறிந்தபின் "உங்கள் மேல் ஒரு தனி மரியாதை ஏற்பட்டது" என்று அந்தப் பெரியவர் சொன்னபோது என்னை நேர்மையாக வளர்த்துவிட்ட திருச்சிற்றம்பலம் ஐயாவை எண்ணிப் பெருமைப்படுகின்றேன்.

இணுவில் வந்ததும் பஸ்சை விட்டு இறங் கிய நான் கெதியாக நடந்து வீட்டுக்குச் செல்லுகின் றேன். கோழிகள் கூவுகின்றன. நாய்கள் குரைக்கின்றன. குருவிகள் கீச்சிடுகின்றன. அந்த ரம்மியமான காலை வேளை என் ஊருக்கு வந்துவிட்டேன் என்ற மகிழ்ச்சியில் கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் செல்லுகின்றேன். என்னைக் கண்டு என்குரல் கேட்ட பேரப்பிள்ளை ஓடிவந்து கட்டியணைத்து முத்தம் தருகின்றது.

**நகைச்சுவைக் கதைகள்**



# "அன்பிற்கும் உண்டோ.....?"

ஒரு ஊரில் ஒரு கணவனும் மனைவியும் வசித்து வந்தார்கள். இடையி டையே சிறு, சிறு சண்டைகள் வந்தாலும் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். அவர்களின் வாழ்க்கை ஒரு மாதிரி ஓடிக்கொண்டிருந்தது.

மனைவிக்கு கணவன் மேல் சந்தேகம் - வேறு பெண்களுடன் தொடர்பு கொண்டிருப்பானோ என்று! எனவே அவனைச் சற்றுச் சோதிக்க விரும்பினாள்.

ஒரு நாள் கணவனுடன் மிகவும் நெருக்கமாக இருந்த சமயத்தில் "உங்களுக்கு உண்மையிலேயே என்மீது பிரியமா?" என்று கேட்டாள். கணவன், இதிலென்ன உனக்கு சந்தேகம்! உன்மீது மிகவும் பிரியமாக இருக்கின்றேன்" என்றான்.

"அதில்லீங்க, ஒவ்வொருத்தன் தனது மனைவிக்கு என்னென்னவோ செய்கிறான். ஷாஜகான் தன் காதல் மனைவிக்கு உலக அதிசயமான தாஜ்மகாலைக் கட்டினானாமே! நீங்களும் இருக்கிறீர்களே நான் தவறிப் போனால் என்ன செய்வீர்களோ..." என்றாள் மனைவி ஏக்கத்துடன்!


விட்டானா எங்கள் கதாநாயகன் " நீ ஒன்றுக்கும் யோசிக்காதே! எல்லாம் ரெடியாக இருக்கு, றோட்டுக் கரையில் காணி இருக்கு. நிறையப் பணமும் இருக்கு நான் இப்பவும்ரெடி - நீதான்..." என்று இழுத்தானே பார்க்கலாம்!

மனைவி மயங்காத குறை!

**- இணுவை இரகு**

# 'தமிழ்நிதி' விருதுபெற்ற தாமரைத் தீவான்

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி



திருகோணமலை மாவட்டத்திலுள்ள இயற்கை அழகு பொங்கும் கிராமங்களில் ஒன்று தாமரைவில். இது ஆலங்கேணியை அண்டிய கிராமம். இந்த வில்லில் இருந்து புறப்பட்டவர்தான் கோலேந்தி, எறிகோலன், சுதந்திரன், அகதிக்கவிராயர், சாப்பாட்டுக்கவிராயர், விண்ணாங்கன், அலைஞ்சான் புலவர், மனாப்புலவர், பொடிப்புலவன், இப்படிப்பல நாமங்களைக்கொண்ட கவிஞர் தாமரைத்தீவான், சிறந்த மரபுக் கவிஞர்.

1952 ஆம் ஆண்டு தனது எழுத்துப் பணியை ஆரம்பித்த அவருடைய முதலாவது கவிதையான 'வெள்ளைப்பூனை' 1956ம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் வெளியாகியது. தொடர்ந்து தினகரன், வீரகேசரி, சுடர், புதிய உலகம், காந்தீயம், சந்திரதீபம், சிந்தாமணி, முரசொலி, சஞ்சீவி, நம்தேசம், தினமுரசு, தினக்கதிர், செங்கதிர், தமிழ் உலகம், சர்வதேச தமிழர், மலையகம், மழலை என்செல்வம், வெண்ணிலா, சூடாமணி, சுடர்ஒளி, சந்நிதி, வாழ்க்கை, தாயக ஒலி ஆகிய ஏடுகளில் வெளியாகின.

வெரித்தாஸ், பிபிஸி, வானொலிகளிலும் அவருடைய கவிதைகள் ஒலிபரப்பப்பட்டன. அது தவிர உள்ளூரில் கேணிச்சுடர், ஈச்சம்பழம், பதுமைநெஞ்சங்கள், தென்றல், தாகம், கோணைத்தென்றல், வசந்தம், சிவநெறி போன்ற கையெழுத்து, தட்டச்சு மற்றும் அச்சுச் சஞ்சிகைகளிலும் அவரது படைப்புக்கள் வெளியாகின.

ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள தாமரைத்தீவான் 24.07.1932 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் இராசேந்திரம். தந்தையாரின் பெயர் சோமநாதர். தாமரைவில்லில் பிறந்தாலும், ஈச்சம் தீவுக் கிராமமே இவரை வளர்த்தது. தான் பிறந்த ஊர், தன்னை வளர்த்த ஊர் இரண்டையும் இணைத்து 'தாமரைத்தீவான்' என்ற புனைப்பெயரைச் சூட்டிக் கொண்டார். இவரின் புனைப் பெயரில் ஒட்டிக் கொண்ட தாமரைவில் - கிராமம் இன்று எங்கோ தொலைந்து விட்டது. தாமரைவில் ரோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வி, பின்னர் மூதூர் அர்ச் அந்தோனியார் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் மேற்படிப்பு மேற்கொண்டு எஸ். எஸ். ஸி வகுப்பில் சித்தியடைந்தார். பின்னர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் சேர்ந்துகொண்டார்.

1992 இவரின் முதல்நூல் '**பிள்ளை மொழி**' அன்பர் நிதியத்தால் வெளியிடப்பட்டது. அந்த ஆண்டில் ஒன்பது தினங்கள் கழித்து 24.07.92 இல் இவரது '**கீறல்கள்**' என்ற நூல் தாகம் கலை இலக்கிய வட்டத்தால் வெளியிடப்பட்டது. இவரின் '**கட்டுரைபத்து**' என்ற நூலும் தாகம் இலக்கிய கலை

வட்டத்தால் வெளியிடப்பட்டது. இவரின் **'கட்டுரைபத்து'** என்ற நூல் விஜே பதிப்பகத்தினால் 01.05.97 இல் வெளியிடப்பட்டது. **'போரும் பெயர்வும்'** என்ற அதன் வெளியீடு 05.09.99 இல் இடம்பெற்றது. அம்மா பதிப்பகம் இவரின் **'ஐம்பாலைம்பது'** என்ற நூலை 11.05.2001 இல் வெளியிட்டது. இவரின் நூல்களுள் **'கீறல்கள்'** 1992ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. இவற்றைத் தவிர, முப்பத்திரண்டு இணைப்பு என்பாநூறு, சிறுவிருது, மும்மறை, பத்துப்பத்து, வள்ளுவர் அந்தாதி, போர் நாற்பது என்பன குறிப்பிடத்தக்கவை.

பழந்தமிழ் இலக்கியங்களை ஊன்றிக் கற்றவர் இவர். திருக்குறளை ஒப்புவிப்பதில் ஒப்பற்றவராகத் திகழ்கின்றார். சிரிக்க, சிரிக்க சிந்தனையைத் தூண்டும்படி பேசுவார். எவர் மனங்களையும் புண்படுத்தாமல் பேசும் தாமரைத்தீவானுடைய எழுத்துக்கள் மிகவும் யதார்த்தமானவை. தாமும், மக்களும் அடைந்த அவலங்களை இவரின் எழுத்துக்கள் துல்லியமாக வெளிக்கொணர்ந்துள்ளன. கவிதையை மூச்சாகக் கொண்டவர். இவர் ஏறாத கவியரங்கமே இல்லை எனலாம். இவர் கவிதை சொல்லும் பாங்கே தனி. ஒலி வாங்கியை இவர் பிடித்துக் கொண்டு கவிதை சொல்லத் தொடங்கினால் அரங்கம் சுறுசுறுப்பாகிவிடும்.

தாகம் கலை இலக்கிய வட்டம் 1991இல் இவரைக் கௌரவித்தது. 'திருகோணமலை குறள் திலகம்' என்று 1996இல் குறளமுதத்தினால் பட்டம் சூடப்பட்டார். 1996இல் முத்தமிழ் வளர்கலை மன்றம், 1999இல் திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆண்டு விழா ஆகியவற்றின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். வன்செயல்களின்போது இவர் தனது பொக்கிஷங் களாகக் கருதிய அகநானூறு, புறநானூறு, மலைப்பா, உண்மை அம்பாள் காவியம், கீறல்கள் II, விநாயகமாலை என்பவற்றுடன் 700 நூல்கள், 27 கவிதைத் தொகுப்புகள், 13 மேடைக்கவி ஏடுகள், அச்சுநறுக்குள் எல்லாம் அழிந்து போயின. இதனை நினைக்கும் போது தாமரைத்தீவானின் மனம் ஆறுவதில்லை.

இப்பேர்ப்பட்ட பேரிழப்புகளைத் தாங்கிக் கொண்டு நம்மத்தியில் வாழ்ந்துவரும் தமிழ் அறிஞர், கவிஞர் தாமரைத்தீவானை இவ்வாண்டு கிழக்கு மாகாண அரச தமிழ் இலக்கிய விழாவில் அவரால் 28.07.2016இல் வெளியிடப்பட்ட 'பொன்னகம் மீட்போம்' எனும் 25வது கவிதைத் தொகுதிக்கு சிறந்த தமிழிலக்கிய நூலுக்கான விருது வழங்கிக் கௌரவிக்க மாகாணக் கல்வி, பண்பாட்டுத் திணைக்களம் தீர்மானித்திருப்பது குறித்து ஈழத்தமிழ் உலகம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது. வாழும்போது கலைஞரை வாழ்த்துவதே மேலான பண்பாகும்.

தவமணியின் துணைவராகவும் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், அன்பழகன், சிற்றரசு, தமிழரசி ஆகியோரின் தந்தையாகவும் இருந்து கொண்டு தனது 85வது பிறந்தநாளைக் கடந்து வாழும் தாமரைத்தீவான் பல்லாண்டு வாழ்ந்து திருகோணமலைத் தமிழ் மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும். 'வாழ்நாள் சாதனையாளர்விருது' இரா உதயணன் இலக்கிய விருது விழாவில் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றமை இவரது இலக்கியப்பணிக்குக் கிடைத்த சிறப்பாகும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் வழங்கப்பெற்ற 'தமிழ்நிதி' விருது, அவர் ஈழத்து இலக்கியச் செழுமைக்கு ஆற்றிய, ஆற்றி வருகின்ற ஒப்பற்ற பணிக்குக் கிடைத்த பெருமைக்குச் சான்றாகும். பணிதொடர வாழ்த்துக்கள்.

# "எல்லாம் நன்மைக்கே" எனும் சிந்தனை நலம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

இன்பமும் துன்பமும் மனித வாழ்வில் பகலும் இரவும் போல மாறி மாறி வந்து கொண்டும் மறைந்து கொண்டும் இருப்பது உலக இயற்கையாகும். " இன்பம், இன்பம், இன்பம். இன்பத்திற்கோர் எல்லை காணில் துன்பம் துன்பம் துன்பம்" எனும் மகாகவி பாரதியாரின் பாடல் வரிகள் இதனை உணர்த்துகின்றன. "நன்றும் தீதும் பிறர்தர வாரா" என்பது நம் ஆன்றோர் நமக்களித்த அருள் வாக்கு. இன்பமும் துன்பமும் அவரவர் செய்த நல்வினைகள் தீவினைகள் என்பவற்றின் விளைவுகள்."தாம் தாம் முன்செய்த வினை தாமே அனுபவிப்பார்" என்பது ஔவை மொழி. ஒருவன் செய்த நல்வினைப் பயனை அவனேதான் அனுபவிக்க வேண்டும். அவ்வாறே, செய்தநல் வினையின் பயனாகிய இன்பத்தையும் செய்தவனே அனுபவிக்க வேண்டும். தனது வினைக்கேற்ற விளைவுகளாகிய இன்பதுன்பங்களை அவற்றை விதைத்தவர்களே அனுபவித்துத் தீர்க்க வேண்டும். வேறெவருடனும் பங்கு போட முடியாது. இது இயற்கையின் சட்டமும் இறை நீதியும் ஆகும். இவ்வுண்மையை உணர்ந்து கொண்டால் எவரும் துன்பத்தைக் கண்டு துவண்டு விட வேண்டியதுமில்லை. இன்பத்தைக் கண்டு இறுமாப்பு அடையவும் தேவையில்லை.

"இடுக்கண் வருங்கால் நகுக. அதனை அடுத்தூர்வது அஃதொப்பதுஇல்" என்பது வள்ளுவர் துன்பத்திலிருந்து மீள்வதற்குக் காட்டும் ஒப்பற்ற வழி. துன்பம் வரும் போது அதனை அசட்டை செய்து இன்புற்று மனம் மகிழ வேண்டும். சிரிப்பைக் கண்டதும் துன்பம் தம்மை அலட்சியம் செய்வதாக எண்ணி அவனை விட்டு வெட்கத்துடன் அகன்று விடும். துன்பத்தைக் கண்டு அழுது புலம்பினால் துன்பத்திற்குச் செங்கம்பள வரவேற்பு அளித்தமைக்கு, அது சமமாகும் ஒருமுறை துன்பத்திற்கு இடங்கொடுத்தால் கொடுத்தவனோடேயே நிரந்தரமாக ஒட்டிக்கொண்டு விடும். துன்பத்தை வாலாயம் பண்ணினால் விரைவில் வாலாயம் பண்ணி ஆதரித்தவனையே அழித்துவிடும். "நீ எதைச் சதாநேரும் எண்ணிக் கொண்டிருக்கிறாயோ அதுவாகிறாய்" என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. "நோய்க்கு இடங்கொடேல்" என்று ஔவையார் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். துன்பம் என்பது ஒரு கொடிய நோய். உயிரையே பிரித்து விடும். அதனால் துன்பம் வருமுன் நம்மை அணுகாமல் காத்துக்கொள்வதே விவேகமான செயல். "வரமுன் காக்க", என்று நம் ஆன்றோர் கூறியுள்ளமை அமுத வாக்கு.

மனத்துன்பம் தான் உடல் நோய்கள் ஏற்படுவதற்கு மூலகாரணமாக அமைகின்றது. மன ஆரோக்கியம் உடல் ஆரோக்கியம் இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. ஒன்றின் ஆரோக்கியம் நலம்பெற்றிருந்தால் மற்றதன் ஆரோக்கியமும் நலமுடையதாக இருக்கும். ஒன்றின் நலம் கெடுமாயின் மற்றதன் நலமும் கெட்டு விடும். "துன்பத்திற்கு இடங்கொடோல்" எனும் மகா வாக்கியத்தை அனுசரித்து நடப்பவர்களுக்கு "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்னும் அதியுயர் நிலை கிடைக்கப் பெற்றுவிடும். மனிதனிடம் நிறைய ஆற்றல் உண்டு. அவனுக்கு அவனின் பலம் தெரிவதில்லை. அதனால் அவன் பலவீனன் ஆகிவிடுகின்றான்.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஆராய வேண்டும். தன்னிடமுள்ள குறைநிறைகளை அறிந்து குறைகளை நிவர்த்தி செய்தும் நிறைகளை மேலும் விருத்தி செய்தும் சீரான வாழ்க்கை வாழ வேண்டும். இச்செயற்பாட்டினைத் தற்சோதனை என்றும் அகத்தாய்வு என்றும் மனவளக்கலை குறிப்பிடுகிறது.

“வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை. எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்” என்கிறது வள்ளுவம். “வரமுன் காக்க” என்பதன்படி குற்றம் நேர்வதற்கு முன்னமே அக்குற்றம் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வதற்கு முன்னமே அவ்வாறு சம்பவிக்காது தம்மைக் காத்துக்கொள்ளாதவனுடைய வாழ்க்கை நெருப்பின் முன் உள்ள வைக்கோல் குவியல் போன்று அழிந்து விடும் என்பது மேற்படி குறட்பா வரிகள் தரும் கருத்து.

ஒருவன் துன்பங்களை ஒன்றன்பின்னொன்றாகவும் ஒருமித்தும் அனுபவித்துக்கொண்டு அல்லற்படும்போது பிறரை நொந்து கொள்கிறான். பிறர் மீது பழியைச் சுமத்துகிறான். ஏன் கடவுளையே திட்டியும் வைதும் தீர்க்கிறான். உண்மையில் ஒருவனின் துன்பங்களுக்கு அவனேதான் காரணம் என்பதை ஏனோ ஏற்றுக்கொள்ள மறுக்கிறான் என்பதுதான் விடுவிக்கமுடியாத புதிராக உள்ளது. இந்தப் புதிருக்குச் சரியான விடையைக் கண்டுபிடித்து உண்மை நிலையை உணர்ந்து கொண்டானேயானால் ஒரு பொல்லாப்புமில்லை. எப்பவோ முடிந்தகாரியம். வாழ்வில் மீண்டும் துன்பமில்லாத நிலை எய்தப்பட்டுவிடும். அறநூல்கள் இக் கருத்தையே வலியுறுத்துகின்றன.

எதிர்பார்ப்புக்கள், நிறைவேறாத ஆசைகள், ஏமாற்றங்கள், மன அழுத்தம், இழப்புகள், விரக்திகள், பிரச்சினைகள், தோல்விகள், வறுமை, தீராத நோய்கள், தொல்லைகள், தொந்தரவுகள், நிம்மதியின்மை போன்ற பல்வேறு காரணங்களை துன்பங்கள் ஏற்படுவதும் வாழ்வில் நிலைப்பதற்கும் கூறலாம். எண்ணங்கள், நேர்மறை எதிர்மறை என இருவகைப்படும். நேர்மறை எண்ணங்கள் இன்பத்தையும் எதிர்மறை எண்ணங்கள் துன்பத்தையும் பிறப்பிக்கின்றன.

பேராசை, கடும்பற்று, சினம், உயர்வு-தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால் கவர்ச்சி, வஞ்சகம் இவ்வைந்தும் எதிர்மறை எண்ணங்களின் உறவுகள். இவற்றுடன் உறவு வைத்திருக்கும் வரை துன்பங்கள் நம்மை விட்டு அகலமாட்டா.

தற்காலத்தில் மனிதர்கள் அதிகளவில் தற்பற்று என்னும் சுயநலம் மற்றும் பொருட்பற்று என்பவற்றில் பெரிதும் வேட்கையுடையவர்களாக உள்ளனர். இவற்றால் இன்பத்தை அனுபவிக்கலாம் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் கிடைக்கப்பெறுவதோ துன்பமும் துயரும்தான்.

உலக வாழ்க்கை என்பது பயணம், வழி நெடுக்கிலும் சஞ்சலங்கள் என்று கூறுப்படுகிறது. செல்லுகின்ற வழி நல்ல செப்பனிடப்பட்ட பாதையாக இருந்தால் கற்களோ, முட்களோ, மேடு பள்ளங்களோ அப்பாதையில் இருக்காது. அதனால் கால்கள் இடறி விழுவதற்கோ முட்கள் காலில் ஏறுவதற்கோ வாய்ப்பு இருக்காது. அவ்வாறே வாழ்க்கைப் பாதையும் எண்ணங்கள் பேச்சுக்கள் செயல்கள் என்பவற்றில் தூய்மை, நீதி நேர்மை இருப்பின் எவ்வித சஞ்சலங்களோ துன்பங்களோ இல்லாமல் இன்பமயமானதாக விளங்கும். எனவே மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் அவரவர் வாழும் முறையைப் பொறுத்தே அமைகின்றன. துன்பம் வந்து விட்டமைக்குப் பிறரை நோவதால் பயனில்லை. ஒருவன் புலன் பொறிகளின் உந்துதலால் உணர்ச்சிப் பெருக்கில் பல செயல்களைப் புரிகின்றான். அவற்றால் ஏற்படப்போகும் விளைவுகள் பற்றிக் கருத்திற் கொள்வதில்லை.விளைவறிந்து செயலாற்றும் பண்பு மனிதரிடம் நிலை பேறு கொள்ளும் வரை மனிதனரின் செயல்களால் பெரும்பாலும் துன்பமே விளைகின்றது.

துன்பத்தைக் கண்டு பயந்து துவண்டு விடாது துணிவோடு அதனை எதிர் கொள்பவனே இன்பத்தை அடைவான். உழைத்துப் பொருளைப் பெற்றவனே, பொருளின் மதிப்பை உணர்வான். ஒரு போதும் பொருளை ஊதாரித்தனம் செய்ய மாட்டான். அதனை அளவோடும் உரிய முறையிலும் செலவு செய்து இன்பம் காண்பான். அத்தகைய இன்பந்தான் இனிக்கும், சுவைக்கும். தேடிய பொருளைத் துர்ப்பிரயோகம் செய்தால் போதை தரும் மது, மருந்து மாத்திரைகள், புகைத்தல் என்பவற்றிற்குச் செலவு

செய்து இன்பம் துய்க்க முற்பட்டால் வேறு வழிகளில் ஊதாரித்தனம் செய்தால், அடைவது பெருந்துன்பம் ஆகும். உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் நோயுற்று, மீளாத் துன்பத்தில் மூழ்குவர். இத்தகைய துன்பங்களை மனிதர்கள் வருந்தி அழைத்து பின் அல்லல்படுகின்றனர். இவை தாமாகத் தேடிய துன்பங்கள். எனவே அவை தவிர்க்கக் கூடியவை.

தமக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவன் வீரனுக்கு ஒப்பாவான். "உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு என்கிறது. தமிழ்மறை. தனக்கு உற்ற துன்பத்தைப் பொறுத்தல், எவ் வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல் இவ்விரண்டும் தவம் என்கிறார் வள்ளுவர்.

துன்பங்கள் வருவதும் ஏதோ நன்மைக்குத்தான் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். துன்பத்திலிருந்து நல்ல பாடங்களையும் கற்றுக் கொள்ள முடிகிறது. துன்பத்தை வெல்வதற்குப் பொறுமையும் துணிவும் தேவை. அசட்டை செய்யக் கூடிய மனப்பாங்கும் தேவை.

ஒரு மன்னன், பாக்கு ஒன்றைப் பாக்குவெட்டியால் வெட்டும் போது தவறுதலாகத் தனது கைப்பெருவிரலையும்வெட்டி விட்டான்.அவன் துன்புற்றுத்துடிக்கும்பேது மதிநலம் மிகுந்த மந்திரி மன்னனுக்கு ஆறுதல் கூறும்வகையில் அரசே இதுவும் நன்மைக்குத்தான் வருத்தப்படாதீர்கள். சற்றுப் பொறுமையாக இருங்கள் என்றான். மன்னன் வெகுண்டெழுந்து மந்திரியை நோக்கி "எனக்கு விரல் வெட்டுண்டது நன்மைக்கு என்றா சொல்லுகிறாய். உனக்குச் சிறைத்தண்டனை விதிக்கின்றேன்" என்றான். அத்தண்டனையும் எனது நன்மைக்கே" என்று மன்னனிடம் கூறிவிட்டு மகிழ்சியுடன் மந்திரி சிறை சென்றான்.

அடுத்த நாள் மன்னன் மிருகங்களை வேட்டையாடும் பொருட்டுக் காட்டுக்குச் சென்றான். பரிவாரங்களும்புடை சூழ உடன் சென்றனர். அவ்வேளை ஒரு சிங்கம் அவர்களை எதிர் கொண்டது. பரிவாரங்கள் மன்னனை விட்டு ஓடி விட்டனர். மன்னன் தனித்து நின்று சிங்கத்தை எதிர்த்துப் போராடி அதனைக் கொன்று விட்டு அப்பால் தனியே காட்டு வழியில் செல்லும் போது வேட்டுவர் சிலர் பின்புறமாக வந்து மன்னனைக் கட்டிப் பிடித்துக் கொண்டுபோய் பலியிடுவதற்காக தாம் பூசிக்கும் தேவதையின் முன்நிறுத்தினர். பின்னர் வாளை எடுத்து மன்னனை வெட்ட ஆயத்தமாயினர். அப்பொழுது வேடுவர் தலைவன் நிறுத்தும்படி கட்டளையிட்டு அவன் கைப்பெருவிரல் வெட்டப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றவனை நமது தேவதைக்குப் பலியிடக்கூடாது என்று கூறி மன்னனை விடுவித்தான். மன்னனும் தப்பினேன் பிழைத்தேன் என்று நினைத்து மகிழ்ச்சியுடன் அரண்மனை வந்து சேர்ந்தான்.

உடனே சிறையில் இருந்து அமைச்சரை விடுவித்து அவர் கூறிய 'எல்லாம் நன்மைக்கே' என்ற மகா வாக்கியத்தின் உண்மையை இருவரும் அனுபவ மூலம் உணர்ந்துகொண்டமையை பகிர்ந்து கொண்டனர். அமைச்சரும் சிறைக்குள் அடைக்கப்படா விட்டால் மன்னன் உடன் சென்றிருப்பார். மன்னரை விட்டு ஓடியிருக்க மாட்டார். அவரும் பிடிபட்டிருப்பார். விரல் வெட்டப்பட்ட மன்னரை விடுத்து விரல் வெட்டப்படாத உடல் ஊனமற்ற அமைச்சரைப் பலியிட்டிருப்பார்கள். மன்னரின் துன்பமும் நன்மைக்கே அமைச்சரின் துன்பமும் நன்மைக்கே எனவே துன்பத்தைக் கண்டு துவண்டு விடுதலோ இன்பத்தைக் கண்டு இறுமாப்புக் கொள்ளலோ தேவையில்லை. எல்லாம் நன்மைக்கே!

## அட்டைப்பட விளக்கம்

தமிழ்த்தாயின் கம்பீரமான உருவச்சிலையின் தோற்றமும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி முத்தமிழ் விழாப் படங்களும், பேராசிரியர் வ.மகேஸ்வரனின் மணிவிழாக் கௌரவிப்பும் அட்டையை அலங்கரிக்கின்றன.

# தாய்



பெற்றவளே தாயே
பேரன்பு கொண்டவளே
பெயர்சூட்டி எமை அழைத்துப்
பெருமையினைத் தந்தவளே,

பிள்ளை அழுது விட்டால்
பிடிக்காது நிந்தனக்கு
அள்ளி முத்தமிட்டு
அரவணைப்பாய் அன்போடு
தாகம் பசிதீர்க்க
தாய்ப்பாலை ஊட்டி யல்லோ
நேசம் மலரச் செய்து
நெஞ்சம் குளிர வைப்பாய்
(பெற்றவளே)

தாய்மடி தொட்டிலடா
தலையணை மெத்தையடா
தம்பிள்ளை உறங்கும் வரை
தாயே நீ விழித்திருப்பாய்
எட்டி அடி வைக்க
கட்டி அணைத்திடுவாய்
இடறி விழுந்தாலே
துடியாய்த் துடித்திடுவாய்
(பெற்றவளே)

செல்லக் கதை சொல்லி
மெல்ல உணவூட்டி
நல்ல பிள்ளை யென
நாம் வளரச் செய்திடுவாய்
பாசம் எனும் போர்வையினால்
பாதுகாப்புத் தருபவளே
பாரினிலே தெய்வம்
நீயன்றி வேறில்லை!
(பெற்றவளே)

**- சிவஞானம் மகேந்திரராஜா**
ஓய்வுநிலை கலாசார உத்தியோகத்தர்
திருகோணமலை

# அந்நியமாய்...

அந்நியமாய் ஆயாச்சு - உறவின்
அர்த்தங்கள் போயாச்சு - நான்
அந்நியமாய் ஆயாச்சு - உறவுக்கு
அசலாகிப் போயாச்சு

தந்தை மகள் உறவில்
தர்மவேலி போட்டாச்சு
தாவணி போட்டபின்னே - சொந்த
தமையன் கூடவேறாச்சு

அந்நியமாய் ஆயாச்சு - உறவு
அர்த்தமெல்லாம் போயாச்சு
அந்நியமாய் வந்தவனே - இன்று
அர்த்த முள்ள உறவாச்சு

அர்த்தம் சொல்ல பிள்ளை வந்தான் - தந்த
புருசனையே மறந்தாச்சு
மீசை முளைச்சாச்சு - எம் பிள்ளை
மேகமுட்ட வளர்ந்தாச்சு


ஆசையாய் வளர்ந்த பிள்ளை - அய்யோ
அந்நியமாய் ஆயாச்சு
பாசவலை மீனாச்சு - உறவு
பாலைவன நீராச்சு

பாதி வழி வந்தாச்சு - சரிதான்
மீதிவழி மறைந்தாச்சு - வாழ்க்கை
அர்த்தங்கள் மறந்தாச்சு - வாழ்வில்
அந்நியமாய் வாழ்ந்தாச்சு...

- புதிய மாதவி
(யுகமாயினி)

# பரிசளிப்பு விழா உரை

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்



இன்றைய தினம் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் 2015ம் ஆண்டிற்குரிய பரிசளிப்பு விழா நிகழ்வுகள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடை கின்றேன். வரவேற்புரையில் என்னைப்பற்றிப் பலதையும் கூறிய அதிபருக்கு எனது நன்றி உரித்தாகுக.

கொழும்பு வாழ் தமிழ் மக்களினதும் தமிழ்ப் பெண் பிள்ளைகளினதும் நலன் கருதியும் தமிழ் மக்களின் பாரம்பரிய விழுமியங்களைப் போற்றிப் பாதுகாக்கவும் சைவத்துடன் கூடிய தமிழ்க் கல்வி முறைமையில் பாடங்களைப் புகட்டுவதற்கும் ஒரு சிறந்த மகளிர் பாடசாலை இல்லை என்ற குறையை நீக்கும் முகமாக 1981ம் ஆண்டில் சேர்.பொன் இராமநாதன் அவர்களின் நினைவாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஒரு சிறிய அலகாக இரண்டு ஆசிரியர்களுடனும் இரண்டு மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டு இன்று 1AB தர தேசியப் பாடசாலையாக வளர்ந்திருக்கின்றதென்றால் இப்பாடசாலை தொடங்கிய நாள் முதல் இன்று வரை இக்கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடாத்திய அதிபர்களின் கடுமையான உழைப்பும் அவர்களின் தன்னலமற்ற சேவையுமே காரணம் என்று கூறலாம். மற்றும் பலரின் ஒத்துழைப்பும் உதவியும் அவர்களுக்குக் கிடைத்ததையும் நாம் இந்த நேரத்தில் மகிழ்வுடன் மனதிற்கெடுக்க வேண்டும்.

அத்துடன் இக்கல்லூரியை உருவாக்குவதற்கு ஆரம்ப கர்த்தாக்களாக விளங்கிய புதிய கதிரேசன் கோவில் தர்மகர்த்தா திரு.ஆர்.எம்.பழனியப்பச் செட்டியார் அவர்கள், அன்றைய கல்வி அமைச்சர் கௌரவ நிஸங்க விஜயரட்ன அவர்கள், சேர் பொன்னம்பலம் இராமநாதன் வழிவந்த கௌரவ டி.எம்.சுவாமிநாதன் அவர்கள், இராணி வழக்கறிஞர் திரு.சி.இரங்கநாதன் அவர்கள், திரு.த.சங்கரலிங்கம் அவர்கள் ஆகியோரின் தூர நோக்கின் விளைவே இன்றைய இக்கல்லூரியின் வளர்ச்சியும் தமிழ் மாணவச் செல்வங்களுக்கான நற்கற்பித்தல் நடவடிக்கைகளுமாவன என்று கூறினால் அது மிகையாகாது.

பரிசளிப்பு விழா என்பது பாடசாலைகள் தோறும் நடாத்தப்பட வேண்டிய முக்கிய நிகழ்வாகும். இன்றைய தினம் 2015ம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளிலும் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் வெற்றியீட்டிய மாணவிகளை மேடையேறி தமக்குரிய பரிசில்களை பெற்றுக் கொள்கின்றார்கள். இந்த நிகழ்வில் ஓரிரு புள்ளிகள் வித்தியாசத்தில் பரிசில்களைப் பெறத் தவறிய மாணவிகளும் மற்றும் பரிசில் பெறாத மாணவிகளும் இருக்கக்கூடும். அவர்களுக்கு அடுத்த முறை தமது பெயர்களும் பரிசில்கள் பெறும் மாணவிகளின் பெயர்ப் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். அவ்வாறெனில் இன்றைய நிகழ்வானது, கல்வி நடவடிக்கைகளில் கூடிய கவனஞ் செலுத்தக்கூடிய ஒரு உந்துசக்தியை அவர்களுக்கு வழங்குமென்று எதிர்பார்க்கின்றேன்.

பாடசாலைப் பருவம் என்பது மனித வாழ்வின் மிகவும் மகிழ்ச்சிகரமான காலப்பகுதியாகும். இப்பருவத்தில் மட்டுமே மற்றைய எந்தக் கவலைகளுமின்றி நண்பர், நண்பிகளுடன் கூடிக் குதூகலம்

செய்து எமது அன்புக்குரிய ஆசிரியர்களைக் கலாய்த்து அதே நேரத்தில் அவர்களின் வழிகாட்டல்களில் எமது கல்வி நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு காலம்.

உங்கள் அதிபரின் அறிக்கையில் மாணவியர் ஆளுமை மிக்க மனிதப் பண்புகளுடன் வாழ்க்கையில் பிரகாசிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதாகவும் ஒவ்வொரு மாணவ மாணவியரும் மருத்துவராகவோ அல்லது பொறியியலாளராகவோ அல்லது சட்டத்தரணியாகவோ உருவாக வேண்டும் என்ற சிந்தனைகளை பெற்றோர்கள் கொண்டிருப்பதாகவும் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்கள். தமது பிள்ளைகள் சிறந்த மனிதர்களாக, மனிதப் பண்புகள் நிறைந்தவர்களாக வாழத்தக்க வகையில் அவர்களை வளர்க்க வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டது. நாம் தினமும் பாடசாலைக்கு புறப்படுகின்ற போது உடைகளை அணிந்து கண்ணாடிக்கு முன்நின்று எமது உடைகள் சீராக இருக்கின்றதா? முகம் அழகாக இருக்கின்றதா? நெற்றியில் பொட்டு இருக்கின்றதா? என்ற அனைத்தையும் மறுபரிசீலனை செய்கின்றோம். அதே போன்று எமது பாடசாலைப் புத்தகப் பையில் அன்றைய பாடங்களுக்குரிய புத்தகங்கள் நேரசூசிகையின் படி ஒழுங்காக அடுக்கப்பட்டுள்ளதா? சிற்றுண்டிப் பொதி வைக்கப்பட்டுள்ளதா? என அனைத்தையும் மறுபரிசீலனை செய்கின்றோம். ஆனால் அதே போல் நாம் என்றாவது எமது கல்விச் செயற்பாடுகளை மறுபரிசீலனை செய்திருக்கின்றோமா என்று கேட்டால் பொதுவாக அதற்கு விடை நேர்மறையாகவே இருக்கும். நீங்கள் தினமும் பாடசாலைக்கு செல்ல முன்பு முதல்நாள் பாடங்கள் மீளவும் பரிசீலிக்கப்பட்டதா? பாடசாலையில் தரப்பட்ட வீட்டு வேலைகள் (Home work) முறையாகச் செய்யப்பட்டுள்ளனவா? நேற்றைய பாடங்களில் ஏதாவது விளக்கமற்ற பகுதிகள் காணப்படுகின்றனவா? போன்ற விபரங்களை நாம் மீளப் பரிசீலிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

கல்வி என்பது வேப்பங்காயாக இல்லாமல் தேனாக இனிக்க வேண்டுமானால் இவ்வாறான மறு பரிசீலனை எமக்கு ஒரு தன்னம்பிக்கையை ஊட்டும். அந்தத் தன்னம்பிக்கை மகிழ்வைத்தரும். ஒரு நல்ல மாணவிக்கும் மற்றையவர்களுக்கும் இருக்கும் வித்தியாசம் என்னவென்றால் நல்ல மாணவி வரமுன் காப்பது போல் கேள்விகள் கேட்கப்பட முன் அந்தப் பாடத்தில் அறிவை ஏற்கனவே பெற்றிருப்பார். இந்தப் பரீட்சயம் நாளாந்த மறு பரிசீலனையால்த்தான் ஏற்பட முடியும்.

மகாத்மா காந்தி அவர்கள் தினமும் தன்னை மறுபரிசீலனைக்கு உட்படுத்திக் கொண்டதாலேயே எதிர்காலத்தில் அவர் உலகம் போற்றும் ஒரு உத்தமனாக இந்திய மக்களின் உன்னதமான ஒரு தலைவராக இனங்காணப்பட்டார். பாடங்கள் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும். அதே நேரம் எமது நாளாந்த வாழ்க்கையும் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து பிழையில்லாமல் எழுதப் பேசப் பழகிக்கொள்ள வேண்டும். ஆறுமுகநாவலர் அவர்கள் எழுத்துப் பிழைகளற்ற அச்சுப் பிரதிகளை அச்சு யந்திரத்தில் ஏற்றுவதில் மிகக் கவனமாக இருந்தார். ஒரு முறை ஏதோவொரு இடத்தில் எழுத்துப் பிழை ஏற்பட்டு விட்டது என அவரின் சகோதரரின் மகன் கூறிய வார்த்தையைக் கேட்டு அவர் உடல் முழுவதும் வியர்த்து நடு நடுங்கி அப்புத்தகத்தின் மூலப் பிரதியை எடுத்து எழுத்துப் பிழை இல்லை என்று தெரிந்த பின்னரேயே அமைதி கொண்டாராம். அந்த அளவிற்கு அவர்கள் எழுத்துப் பிழைகள் இன்றி எழுதுவதில், அச்சிடுவதில் அவதானமாக இருந்தார்கள்.


நான் ரோயல் கல்லூரியின் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த போது சஞ்சிகையின் ஆங்கில, தமிழ்ப் பகுதிகளில் ஏதாவது ஒரு பிழை கண்டு பிடியுங்கள் பார்ப்போம் என்று சவால் விடுத்ததுண்டு.

அந்த அளவுக்கு எமக்குத் தன்னம்பிக்கை இருந்தது. இருந்தும் எவரும் பிழை கண்டுபிடிக்கவில்லை! அதனால்த் தப்பினோம்!

இன்று எமது பிள்ளைகளுக்கு லகர ளகர ழகர வேறுபாடுகள் தெரிவதில்லை. ன, ந, ண, போன்றவற்றின் வேறுபாடு தெரிவதில்லை. சின்ன வகுப்புக்களிலேயே பாடங்களை முறையாக எழுத்துக் கூட்டி வாசிப்பதால் எழுத்துப் பிழைகளற்ற சொல் வடிவங்களில் பரீட்சயப்பட எமக்கு முடிகின்றது. முன்பு வானொலி ஒலிபரப்புக்களில் பேசப்படுகின்ற தமிழ் இலக்கியநடை நிறைந்ததாக முறையான உச்சரிப்புடன் கூடியதாக அமைந்திருக்கும். ஆனால் இப்போதோ வானொலிப் பெட்டியை அல்லது தொலைக்காட்சிப் பெட்டியை திருப்பினால் அங்கு பேசப்படுகின்ற தமிழை எப்படி வர்ணிப்பதென்று எமக்குப் புரியவில்லை. திரைப்படங்கள் சில கூட இவ்வாறான பிழைகளை விட ஊக்குவிக்கின்றன. அவர்களின் பேச்சில் ஆங்கிலம் அறுபது சதவீதம் தமிழ் நாற்பது சதவீதம் என்று கூறப்படுகின்றது. தமிழ் கொல்லப்படுகின்றதா என்று ஏங்கவேண்டியுள்ளது. இன்றைய நிலை நீடித்தால் இருபது வருடங்களில் Tamlish என்ற ஒரு புதிய மொழி சென்னை போன்ற நகரங்களில் உற்பத்தியாகிவிடும் என்று மொழி வல்லுநர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள். எனவே மொழிக்கல்வியில் நீங்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும். எம்மெல்லோரையும் பிணைப்பது எமது மொழியே. அந்த மொழியில் பாண்டித்தியம் அடைவது இன்றியமையாதது. அதே போன்று கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு போன்ற பாடங்களிலும் நீங்கள் கூடிய கவனம் செலுத்துவதன் மூலமே உலகைப் பற்றியும் எம்மைப் பற்றியும் எமது சூழலைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். நீங்கள் மருத்துவராக அல்லது பொறியியலாளராக அல்லது சட்டத்தரணியாக அல்லது ஆசிரியராக ஏதோ ஒன்றாக வர முடியும். ஆனால் எம்மைப் பற்றியும் சூழலைப் பற்றியும் எமது அரசியல் நிலைமை பற்றியும் அறிந்து கொண்டால் மட்டுமே எமது வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும். பரந்த அறிவு இன்று எம் எல்லோருக்கும் தேவைப்படுகின்றது. அந்தப் பரந்த அறிவைப் பெறுவதற்கு கணினியறிவு போதுமான அனுசரணை வழங்கி வருகிறது.

அன்பான மாணவியர்களே! 'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்ற பழமொழிக்கேற்ப நீங்கள் வெறுமனே பரீட்சைகளுக்கு தயாராகின்ற ஒரு இயந்திரமாக அல்லாது பாடங்களை விளங்கிப் படியுங்கள். புதிய புதிய விடயங்களை தேடிப் படியுங்கள். நல்ல நூல்களை பெற்று வாசிப்புப் பழக்கத்தை வளப்படுத்திக் கொள்ளுங்கள். கல்வி என்ற பதத்தில் கல்லுதல் என்பது தோண்டுதல் என்று பொருள்படும். 'வி' என்பது 'ஆழமாக' என்று அர்த்தப்படும். ஆகவே ஆழமாகத் தோண்டுதலே கல்வி. கற்றல் எனும் பதத்திற்கு ஏழை பணக்காரன் என்ற வேறுபாடில்லை. கறுப்பு சிவப்பு என்ற வேறுபாடில்லை. உயரம் பதிவு என்ற வித்தியாசம் இல்லை என்பதை மனதில் நிலைநிறுத்தி கல்வியில் கூடிய கவனத்தை செலுத்துங்கள். உங்கள் எதிர்காலம் சுபீட்சமானதாக அமையும் என வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி நவின்று விடைபெறுகின்றேன்.

## அந்தனி ஜீவாவுக்குக் கௌரவம்



ஈழத்தின் கலை இலக்கியத்துறையில் அரைநூற்றாண்டுக்கு மேலாகத் தடம்பதித்து இயங்கிவரும் தமிழ்க் கலையுலக மேதை அந்தனி ஜீவாவுக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. 03.10.2017 அன்று நடைபெற்ற விருது விழாவில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஏ.ஆர்.எல்.விஜேவீர இவருக்கான விருதினை வழங்கிப் பெருமைப் படுத்தியமை அவருக்குக் கிடைத்த கௌரவமாகும். 'தாயக ஒலியும்' அவரை வாழ்த்தி மகிழ்கின்றது.

# தமிழறிஞர் சைமன் காசிச்செட்டி



இலங்கையில் அரசியல்களத்தில் முதன்முதலாக தடம்பதித்த இந்திய வம்சாவளித் தமிழர் சைமன் காசிச்செட்டியார் ஆவார். இவர் தமிழகத்தின் தூத்துக்குடி பகுதியை சேர்ந்தவராவர். இவரின் பெற்றோர் மதப்பிரசாரம் புரிவதற்காக ஒல்லாந்தரால் தூத்துக்குடியிலிருந்து அழைத்துவரப்பட்டு கற்பிட்டியில் குடியமர்த்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சமூகத்தினர்கிறிஸ்தவ மதத்தவர்களாவர். ஒல்லாந்தர்களின் ஆட்சிகாலத்தில் நீர்கொழும்பு, வென்னப்புவை, சிலாபம், கற்பிட்டி, கரையோரப் பிரதேசங்களிலேயே குடியேறியுள்ளனர். இவர்கள் கொழும்பு மாவட்டத்தில் 6075 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 4093 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 206 பேருமாக வாழ்கின்றனர். ஏனைய மாவட்டகளில் ஒருவர் முதல் இருபது பேர்வரை இந்த சமூகத்தினர் வாழ்கின்றனர். இச்சமூகம், இந்நாட்டின் குடிசன மதிப்பீட்டின் பதிவு இல்லாத மாவட்டங்களாக வன்னி மாவட்டமே காணப்படுகின்றது.

கற்பிட்டியில் குடியேறிய இந்திய செட்டி சமூகத்தினர் இன்றும் கற்பிட்டியில் செட்டிமார் என்றே அழைக்கப்படுகின்றார்கள். ஒல்லாந்தரினது ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து பாக்கு, சங்கு, முத்து, மாணிக்கக்கல் வர்த்தகத்திற்கு வருகைதந்த தமிழர்கள், இந்நாட்டின் வடமேற்கு கரையோரத்திலேயே வர்த்தகம் புரிந்து இங்கு குடியேறியதாக வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

போர்த்துகீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சி அதிகாரத்தால் தொப்பி, சப்பாத்து, கந்தோரு, தக்செரு, தாரே (மேல்மாடி), ஸ்தோப்பு, சீத்தை, லூங்கி போன்ற சொற்கள் சிங்கள. தமிழ் மொழிகளில் கலந்து வழங்கப்படுவது போன்று இந்நாட்டின் அந்நியர் ஆட்சிக்காலத்தில் திறை சேகரிக்கும் அதிகாரிகள் காரியாலயங்களில் இந்தியத் தமிழர்கள் அதிகாரிகளாக பதவி வகித்தமையின் காரணமாகவே கச்சேரி எனும் இந்தி மொழிச்சொல் இன்றும் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பழங்காலமாக இந்தியத் தமிழர்களின் தாக்கம் இந்நாட்டில் பலவித கோணங்களில் ஏற்படலாயிற்று.

1833 ஆம் ஆண்டு இந் நாட்டில் ஆங்கிலேயரால் முதலாவது அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதன் விளைவாக 1834 ஆம் ஆண்டு முதலாவது சட்டசபை ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சட்டசபைக்கே இந்திய வம்சாவளித் தமிழரான சைமன் காசிச்செட்டி 1838 இல் அன்றைய தேசாதிபதி ஜே.ஏ.ஸ்ருவாட் மக்கென்ஸியால் தமிழ் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரின் கல்வித்தகைமை, திறமை, அறிவு முதலியவற்றை கொண்டே ஆங்கில ஆட்சியாளர்களால் சைமன் காசிச் செட்டிக்கு சட்டசபைக்கான தமிழ் மக்களின் சார்பாக உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது. 1838 முதல் 1845 வரை இவர் சட்டசபையில் உறுப்பினராகச் செயற்பட்டுள்ளார்.

இவர் சட்டசபை உறுப்பினராகப் பதவி வகித்த காலத்திலேயே ஒல்லாந்தரால் விதிக்கப்பட்டிருந்த இந்திய செட்டிமார் இலங்கையில் நிலம் வாங்கலாகாது என்ற சட்டம் நீக்கப்பட்டது. இச்சட்ட மூலத்தை நீக்க இவர் பெரும் முயற்சி எடுத்துள்ளார். சைமன் என்ற பெயரும் ஒல்லாந்தர் இனப்பெயராகும். இதன் காரணமாகவே பலர் இவரை இந்திய வம்சாளித்தமிழர் என ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர்.

தூத்துக்குடி பிரதேசத்தவரான சைமன் காசிச் செட்டியின் புகழ் இன்று கற்பிட்டியில் மங்காதுள்ளது. இவர்கள் அரசியல் ரீதியில் மட்டுமல்லாது, பல சாதனைகளுக்கு உரிமையாளராவர். இவரின் சாதனை தமிழ் இலக்கிய உலகில் சாதனையாகப் பதிவாகி வாழ்கின்றது. இவர் புத்தளம் மாவட்டம் கற்பிட்டியில் 21.03.1807 இல் பிறந்தவர். இவர் தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்றவராவார்.

ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், போர்த்துக்கீசம், ஒல்லாந்தம் ஆகிய மொழிகளுடன் சிங்களம், சமஸ்கிருதம், எபிரேயர், அரபு மொழிகளிலும் பெரும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்

முதலில் கற்பிட்டி பொலிஸ் நீதிமன்றத்தின் மொழி பெயர்ப்பு முதலியராக கடமையாற்றத் தொடங்கினார். இவரின் மொழித்திறனைக்கண்ட ஆங்கிலேயர் அரசு 1828 ஆம் ஆண்டு புத்தளம் மணியக்காரராக நியமித்தது. 1833 ஆம் ஆண்டு புத்தளம் மாவட்ட முதலியாராக நியமனம் பெற்றார். 1838 ஆண்டு தேசாதிபதியால் சட்ட சபைக்கான உறுப்பினாராக நியமனம் செய்யப்பட்டு 1845 ஆம் ஆண்டு வரை பெரும்பணியாற்றினார்.

பின்னர் 1845 இல் சிவில் சேவிஸ் (CIVIL SERVICE) எனப்பட்ட நாட்டாச்சிச்சேவை பதவியை சேர்ந்த பொலிஸ் நீதவான் பதவிக்கு தெரிவானார். இதன்படி முதலாவது கற்பிட்டிப் பொலிஸ் நீதவானாகக் கடமையேற்றார். 1852 இல் சிலாபம் நீதிமன்ற நீதிவானாகக் கடமையாற்றினார்.

இவரே இன்றைய புத்தளம் நீதிமன்றத்துக்கு அடிக்கல் நாட்டியவர். இவ்வாறு பல உயர் பதவிகளுடன் வாழ்நாள் தோறும் இலக்கிய ஆராய்ச்சியிலும் வரலாற்று ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வரலாறு, மெய்யியல், சமயம். சமூகவியல் என பல்வேறு துறைகளிலும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இவர் தனது 27 ஆவது வயதில் 1834 இல் THE CEYLON GAZETTER என்னும் அரச செய்தி நூலை வெளியிட்டார். இது ஒரு திரட்டு வரலாறு நூலாகும். இந்நூலில் சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்தின் வரலாற்றை பல ஆதாரங்களுடன் தெரிவித்துள்ளார். இந்நூலை இவர் வெளியிட்டமைக்காக அக்காலத்து குடியேற்ற நாட்டு செயலாளர் இவருக்கு நூறு கிழிகள் பணப்பரிசாக வழங்கி கௌரவம் வழங்கியுள்ளார்.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த புலவர்களின் வரலாற்றைத் திரட்டி தொகுத்து ‘TAMIL PLUTARCE’ என்னும் பெயரில் 1859 இல் ஆங்கிலத்தில் வெளியிட்ட பெருமையும் இவருக்குரியதாகும்.

இவர் இயற்றிய நூல்கள் பின்வருமாறு

1. தமிழர் சாதிப்பகுப்பு முறை – 1831
2. புத்தளம் பகுதியிலுள்ள முக்குவரின் உற்பத்தியும் வரலாறும் – 1831

3. தமிழர் சடங்கு முறைகள் - 1831
4. இலங்கை சோனகரின் பழக்கவழக்கங்கள்
5. THE CEYLON GAZETTER -1834
6. மலையகராதி
7. இலங்கை சரித்திர சூசனம் - 1839
8. யோசேப்பு வாஸ் முனிவர் சரித்திரம் - 1848
9. இலங்கையில் கத்தோலிக்க சமய அபிவிருத்தி – 1848
10. பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம், இந்து, இஸ்லாமிய மதச் சான்றுகளுடன் விளக்கவுரை – 1853
11. குதர்க்கதிகாரம் - 1854
12. TAMIL PLUTARCE – 1859

தமிழுணர்ச்சி மிகுதியும் பரவாத காலத்தில் தமிழுக்காக தமிழ் மக்களின் பிரதிநிதியாக சட்டசபை உறுப்பினராக வாழ்ந்த சைமன் காசிச்செட்டி, 1860 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் திகதி இவ்வுலக வாழ்வினை நீத்தார்.

இவ்வாறு பல திறமைகளைக் கொண்ட இந்திய வம்சாவளித் தமிழரான சைமன் காசிச்செட்டி வாழ்ந்த புகழ்பூத்த கற்பிட்டியில் இன்றும் செட்டி சமூக உறுப்பினர்கள் வாழ்கின்றனர். இவர் வாழ்ந்த வீடும் இன்றும் கற்பிட்டியில் உள்ளதோடு இவரின் வாரிசுகளும் இன்றும் கற்பிட்டியில் வாழ்கின்றனர்.

இவ்வாறு பெரும் முகவரியோடு இன்றும் பேரறிஞர் சைமன் காசிச் செட்டி எம்மத்தியில் வாழ்கிறார். இவரை தமிழ் அறிஞராக மட்டுமல்லாது, ஒரு சமூகத்தின் மைல்கல் என அங்கீகாரம் வழங்குவது இந்திய வம்சாவளி தமிழர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

**- சிலாபம் திண்ணனூரான்**


## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா : ரூபா 900(அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு : $30(U.S), £20(U.K)


உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

**தொடர்பு :**

| **திருமலை பாலா** | **வங்கிக் கணக்கு விபரம்** |
| --- | --- |
| (Thirumalai Bala) | T.Sivasupramaniam |
| London | A/C No : 8100086490 |
| 07956486014 | Commercial Bank |
| | Wellawatte, Sri Lanka |

# உலகமயமாக்கலும் ஊடகங்களும்!

**தோழர் கார்த்திகேசன் நினைவுப் பேருரை 2017.09.24**



கார்த்திகேசன் மாஸ்டரின் இந்த நினைவுப் பேருரைக்குத் தலைமை தாங்கும் திரு பி.பி.தேவராஜ் அவர்களே, இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளரான நீர்வை பொன்னையன் அவர்களே, இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கும் முற்போக்கு கலை இலக்கிய மன்ற உறுப்பினர்களே, மற்றும் இங்கு வந்திருக்கும் பெரியோர்களே, சகோதர சகோதரிகளே அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கார்த்திகேசன் மாஸ்டர் ஒரு தீவிரமான கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளராக இருந்த அதேவேளையில் அவர் ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும் தன்னை வெளிப்படுத்தினார். அந்த வகையில் உலக மயமாக்கல் மற்றும் ஊடகங்கள் என்பன அவருடைய அக்கறைக்குரிய விடயங்களாக இருந்துள்ளன. அதனால் உலகமயமாக்கலும் ஊடகங்களும் என்ற தலைப்பில் அவருடைய இவ்வருடத்துக்கான நினைவுப் பேருரையை நிகழ்த்துவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

உலகமயமாக்கல் அல்லது Globalistion என்பதையிட்டு இன்று அதிகளவுக்குப் பேசிக்கொள் கின்றோம். வர்த்தகத்துறை, ஊடகத்துறை, கல்வித்துறை, தகவல் தொழில்நுட்பம் என அனைத்திலுமே இன்று உலகமயமாக்கல் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இந்த "உலகமயமாக்கல்" என்பன மூலம் நாம் புரிந்துகொள்வது என்ன? அது எப்போது ஆரம்பமாகியது? உலகமயமாக்கலுக்கும் ஊடகங்களுக்கும் என்ன சம்பந்தம்? இவற்றால் மனித சமூகத்துக்குக் கிடைக்கப்போகும் நன்மை என்ன? என்பனவற்றையிட்டு ஆராயவேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

உலகமயமாக்கல் என்பது உண்மையில் மனித சமூகம் நாகரீகமடையத் தொடங்கிய காலத்திலேயே ஆரம்பமாகி விட்டதெனக் கூறலாம். அதாவது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகமயமாக்கல் ஆரம்பமாகிவிட்டது. இருந்தபோதிலும் அது குறித்த கோட்பாடுகள் அண்மைக் காலத்தில்த்தான் வளர்ச்சியடையத் தொடங்கியிருந்தன. இது ஒரு தொடர்ச்சியான நிகழ்வு. குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர்தான் உலகமயமாக்கல் குறித்த விவாதங்கள் அதிகரித்தன. அதாவது கெடுபிடி யுத்தத்தின் முடிவு உலகமயமாக்கலுக்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தியது எனக் கூறலாம். உலகமயமாக்கலுக்கு வெவ்வேறு விதமான வரைவிலக்கணங்கள் சொல்லப்பட்டாலும் அடிப்படையான சில விடயங்களை புரிந்துகொள்வது அவசியம்!

உலக சமூகங்களிடையே அதிகரிக்கும் தொடர்பையும் அதனால் ஏற்படும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலையையும் உலகமயமாக்கல் எனலாம். தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, அரசியல் பொருளாதார முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலக சமூகங்களிடையே அதிகரிக்கும் தொடர்பையும் அதனால் ஏற்படுத்தப்பட்டு வரும் ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலையையும்தான் இது குறிப்பிடுகின்றது.

# AA Accounting & Business Solutions Associates

**265 Haydons Road / London SW19 8TY**

**Accountants and Management Consultants**

*for Efficient and Quality Professional Accounting Services*

**WE SPECIALISE IN**

- Year End Accounts Preparation
- Management Accounts
- Solicitors Accounts
- Book Keeping
- Self Assessment Tax Returns
- Vat and TAX Investigations
- Payroll Preparation
- Business Startup Advice
- Business Plans and Cash Flow Forecasts
- Management Consultancy

*Also through our contacts we are able to raise Finance for New Business*

Contact :

**UTHAYANAN or SASI**

Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205

www.aa-accounts.co.uk

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
## Solicitors

- Conveyancing
- Residential & Commercial
- Matrimonial
- Immigration
- Landlord & Tenants

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX : 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com




# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY

59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF

Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND
ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA





## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP



*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs-male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA

தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது



### OUR BRANCHES:

EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

TEL : 020 8518 3288

MOB : 07950 346 432

Email : info@henshou.com    Web : www.henshou.com

# Easan & Co

## Chartered Management Accountants

SPECIALISTS IN ARRANGING COMMERCIAL LOANS

- *Self Assessment Tax Return*
- *CIS Refunds*
- *Accounts & Book Keeping*
- *VAT Returns*
- *PAYE*
- *Management Accounting*

PERSONAL LOAN

**S.Eswaranathan ACMA**
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel : 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 078 01227017

உலகமய சூழலில் ஒரு சமூகத்தின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு நிலைமைகளும் நிகழ்வுகளும் அதில் ஏற்படக்கூடியமாற்றங்களும் மற்றைய சமூகங்களில் கூடிய விகித தாக்கத்தை ஏற்படுத்தும். அதாவது அமெரிக்காவிலோ ஐரோப்பாவிலோ ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடி இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். தகவல் தொழில்நுட்ப புரட்சியும் இணையப் புரட்சியும் போட்டி போடும் யுகம் இது. இதனுடன் அதிகரித்துள்ள போக்குவரத்து வசதிகளும் உலகமயமாக்கலை மேலும் விரைவுபடுத்தியிருக்கின்றது. அல்லது விரிவுபடுத்தியிருக்கின்றது எனக் குறிப்பிடலாம். அரசியல், பொருளாதாரம், பண்பாடு என அனைத்துத் தளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த உலகமயமாக்கல் இருந்து வருகின்றது.

தாமஸ்ப்ரீட்மன் என்பவர் தன்னுடைய The World is Flat என்ற தமது நூலில் உலகமயமாதல் அல்லது உலகமயமாக்கலை மூன்று கால கட்டமாகப் பிரிக்கின்றார். ஒவ்வொரு காலகட்டத்திலும் வணிகம் எவ்வாறு நடந்துள்ளது என்றும் அதன் பரிணாமம் எவ்வாறு மாறி வருகிறது என்பதையும் விரிவாக எழுதியுள்ளார். உலகமயமாக்கல் 1 என்பது கி.பி 1492 கிபி 1800 வரையிலான காலகட்டமாகவும், உலகமயமாக்கல் 2 என்பது கி.பி 1800 - 2000 வரையிலான காலகட்டமாகவும் உலகமயமாக்கல் 3 என்பதை தற்போதைய காலகட்டமாகப் பார்க்க வேண்டும் என்கிறார். உலகமயமாக்கல் 3 காலகட்டம் என்பது ஒவ்வொரு தனி நபரின் பங்களிப்பும் அதற்கு தொழில் நுட்ப வளர்ச்சியின் உதவியும் பேருதவியாக அமையும். இக்காலகட்டத்தில் தான் நாம் இன்று உள்ளோம் என்கிறார் தாமஸ் எல் ப்ரீட்மன். அதாவது இந்த மூன்றாவது கட்டம் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் உலகமயமாதல் நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் ஆரம்பமாகிய போது உருவாகி விட்டது. இலங்கை இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் வளத்தையும் கொண்டு வருகின்றது என்ற போர்வையில் இடம்பெறும் ஒரு பொருளாதார ஆக்கிரமிப்பாகவே இதனைப் பார்க்கலாம். வளர்ந்து வரும் நாடுகளுக்கு நிதி வளத்தைப் பெருக்க உலகமயமாக்கல் உதவுகிறது என்பது ஒரு சாராரின் கருத்து. மற்றொரு கருத்து பொருளாதார சமூக பண்பாட்டு அடிப்படையில் உலகமயமாதல் பாதகமான விளைவுகளை வளர்ந்து வரும் நாடுகளில் ஏற்படுத்துகின்றது. இதன்படி உலகமயமாதல் வளர்ந்து வருகின்ற நாடுகளின் உரிமைகளை நசுக்குகிறது என முன்வைக்கப்படும் கருத்தை முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. வளம் வரும் என்று வளர்ந்து வரும் நாடுகள் எதிர்பார்க்கும் வேளையில் கொள்ளை லாபம் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டு முதலாம் உலக நாடுகள் செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது. இந்தக் கருத்திலும் நிறைய உண்மைகள் உள்ளன.

உள்நாட்டு வர்த்தகம் என்பதைவிட நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் இன்று மேலோங்கி யிருக்கின்றது. பன்னாட்டு வர்த்தகம் இன்று பல மடங்கு வளர்ச்சியடைந்திருக்கின்றது. இந்த பன்னாட்டு வர்த்தகப் போட்டியில் பல்தேசிய நிறுவனங்கள் பல களம் இறங்கியிருக்கின்றன. உலக மயமாக்கலையே நம்பி இவை வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கடை பரப்புகின்றன. சுதேச உற்பத்திகளையே பயன்படுத்திய மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் இதனால் வெளிநாட்டு உற்பத்திகளை நாடத் தொடங்குகின்றார்கள். மோட்டார் வாகனங்கள் முதல் அன்றாட உணவுப் பொருட்கள் வரையில் பல்தேசிய நிறுவனங்களின் கைகளில் ஒப்படைத்துவிட்டு இந்த மூன்றாம் உலக நாடுகள் தமக்குத் தெரியாமலே தமது வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கின்றன. நாகரீகம் என்ற போர்வையில் எமது பொருளாதாரம் சுரண்டப்படுவதற்கு நாம் இடமளித்துக் கொண்டிருக்கின்றோம்.

முதலாம் உலக நாடுகள் இலங்கை, இந்தியா போன்ற வளர்ச்சியடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளை ஒரு வணிகச் சந்தை என்ற ரீதியிலேயே பார்க்கின்றன. மூன்றாம் உலக நாடுகளின் வளங்களை உறிஞ்சி பின்னர் அதனை அவர்களுக்கே விற்பனை செய்து பெருமளவு பணத்தை உழைக்கின்றன. மக்களின் நுகர்வுக் கலாசாரமே பொருளாராரத்துக்கு அடிப்படையாக இருக்கின்றது. உலகமயமாக்கல் காரணமாக மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் இலகுவாக வெளிநாட்டுப் பொருட்கள் மீதான மோகத்தில் உள்நாட்டு உற்பத்திகளை மறந்து விடுகின்றார்கள். இது சுதேச உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை இல்லாமல் செய்துவிடுகின்றது. இந்த வகையில் உலகமயமாக்கல் என்பது வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு பெருமளவு தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு வருவதாக அமைந்தாலும் பொருளாதர ரீதியில் பாரிய சுரண்டலுக்கு இடம்கொடுப்பதாகவே அமைந்து விடுகின்றது.

அதேபோலத்தான் பண்பாடு கலாசாரம் என்பவற்றில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் குறிப்பிடலாம். உலகமயமாக்கலின் மூலமாக வரும் கலாசார சீரழிவுகள் எமது பண்பாட்டு வேரையே அழித்து விடுகின்றது. ஆரோக்கியமான பலவற்றை நாம் உலகயமாக்கலின் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடிகின்ற போதிலும் அதன் மூலமக வரக்கூடிய பாதக விளைவுகளையிட்டு அதிகளவு கவனம் செலுத்தப்படாத நிலையும் காணப்படுகின்றது.

உலகமயமாக்கல் என்பதை அமெரிக்க மயமாக்கல் என்றும் ஒரு கருத்து முன்வைக்கப்படுவ துண்டு. ஆனால் இது முழுமையாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு கருத்தல்ல. உலகமயமாதலில் அதிக அளவுக்குப் பயனடைந்த நாடாக அமெரிக்கா விளங்கியது என்பது உண்மைதான். ஆனால் தொழில்நுட்ப் வளர்ச்சியின் மூலம் அனைத்து நாடுகளும் குறிப்பாக வளரும் நாடுகளான இலங்கை, இந்தியா, சீனா மற்றும் ஆபிரிக்க நாடுகளும் அதிகம் பயனடைகின்றன. எந்த நாட்டின் குடிமகனாக இருந்தாலும் அவனது மொழியை, உணவை, சினிமாவை, கலையை எந்த நாட்டில் இருந்தாலும் பெற முடிகிறது என்பதே உலகமயமாதலின் வெற்றியாக உள்ளது. உலகமயமாதல் என்பது முதலாளித்துவத்தை வளர்த்தல், சந்தையில் தமது வியாபாரச் சின்னத்தை முன்னிறுத்தல், விரைவு உணவகங்களை வளர்த்தல், நுகர்வோரை அடிமையாக்கல், ஒரு கலாசாரத்தின் மீதும் சமூகத்தின் மீதும் வேறொரு கலாசாரத் தாக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவை பல நாடுகளில் பல வருடங்களுக்கு உள்ளது என்பது உண்மைதான். ஆனால் உலகமயமாதலை வெறுமனே பொருள் சார்ந்தோ சந்தை மட்டும் என்றோ வணிகம் என்று மட்டுமோ சொல்லிவிட இயலாது என்கிறார் தாமஸ் எல் ப்ரீட்மன். உலகமயமாதல் மேற்கூறியவற்றைக் காட்டிலும் சற்று பரந்த ஆழ்ந்த மற்றும் நிறைய தகவல் தொடர்புகளையும் புதிய யோசனைகளையும் பரவலாக்குவதும் கூட உள்ளடக்குகின்றது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது உலகமயமாக்கல் என்பது அவசியமான ஒன்றாகத் தோன்றும். மூன்றாம் உலக நாடுகளுக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகவும் இதனை சிலர் கருதுகின்றார்கள். இதனை ஒரேயடியாக ஆபத்தானதெனச் சொல்லி நிராகரித்துவிட முடியாது. அறிவியல் தகவல் தெழில்நுட்பம் விஞ்ஞானம் என்பவற்றில் மூன்றாம் உலக நாடுகள் பெற்றுவரும் முன்னேற்றத்துக்கு உலகமயமாக்கல் அடிப்படையாக இருந்துள்ளது என்பதை மறுத்துவிட முடியாது. ஆனால் எமக்காக இருக்கக்கூடிய தனித்துவமான அடையாளங்களை உலகமயமாக்கல் அழித்துவிட்டால் அந்த முன்னேற்றங்களின் பலன் எதற்காக என்ற கேள்வி எழும். ஆக உலகமயமாக்கலின் மூலமாக நலன்களை அடையாளங்கண்டு அதனை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மறுபுறத்தில் அதன் பாதகமான தன்மைகளை இனங்கண்டு அதனைப் புறக்கணிப்பதற்கும் தயங்கக்கூடாது.

உலகமயமாக்கல் எனக குறிப்பிடும் போது அதில் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று உள்ளூரில் உலகமயமாக்குதல் மற்றது உலகத்தில் உள்ளூர் மயமாக்குதல் எனக் கூறலாம். இதனை இவ்வாறு குறிப்பிடலாம்: உலக வணிகத்தை, உலக இசையை, உலக உணவை, உலக பொழுது போக்கு அம்சங்களை, உலக செய்திகளை, உலகசினிமாக்களை, உலக அரசியலை உங்கள் வீட்டிற்கு அல்லது உங்களுக்கு நேரடியாகக் கொண்டு வருவது உள்ளூரில் உலகமயமாக்குவது என்று சொல்லலாம். மறுபுறத்தில் இதே விடயங்களை அதாவது எமது உள்ளூர் அரசியலை, உள்ளூர் கலை நிகழ்ச்சிகளை, உள்ளூர் சினிமாவை, உள்ளூர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, உள்ளூர் உணவை உலகில் உங்கள் மக்கள் வாழும் ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு செல்வதே உலகத்தில் உள்ளூர் மயமாக்குதல் எனக் குறிப்பிடலாம். உதாரணத்துக்கு அமெரிக்காவின் புகழ்பெற்ற உணவகங்களான கே.எப்.சி அல்லது மக்டொனால்ட் போன்றவற்றின் உணவுகளை இங்கு எம்மால் பெறமுடிகின்றது. அதேபோல லண்டனிலோ அல்லது அவுஸ்திரேலியாவிலோ இலங்கை உணவகங்களைக் காணமுடியும். அதனைவிட சிலோன் ரி சர்வதேச ரீதியாக புகழ்பெற்றது என்பது அனைவருக்கும் தெரியும். இதனை புலம்பெயர்ந்த எம்மவர்கள் மட்டுமன்றி அந்த நாட்டவர்களும் நுகர்வதைக் காணலாம். இது உலகத்தை இலங்கை மயமாக்குதல் எனக் குறிப்பிடலாம். அதாவது உலகமயமாக்கல் என்பது இரு பக்கங்களைக் கொண்டது.

இந்த உலகமயமாக்கலில் ஊடகங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. இந்த இடத்தில் மலேசியாவின் முன்னால் பிரதமர் மகாதீர் முகமத் அவர்கள் சொன்ன ஒரு கருத்து முக்கியமானதாகப்படுகின்றது. அவர் சொன்னது இதுதான் : '18 ஆம்நூற்றாண்டில் கடற்படை யார் கைகளில் இருந்ததோ அவர்களுக்கே இந்த உலகம் சொந்தமாக இருந்தது. 19 ஆம் நூற்றாண்டில் பலம் வாய்ந்த விமானப் படைகளை வைத்திருந்த நாடுகள்தான் உலகைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தன. ஆனால் 20ஆம் நூற்றாண்டில் உலக ஊடகங்களை யார் தமது காட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றாரோ அவருக்கு உலக நாடுகள் சொந்தமாகிவிடும்" இது முன்னாள் மலேசியப் பிரதமரின் கருத்து. இது ஊடகங்கள் இன்று பெற்றிருக்கக்கூடிய சக்தியை வெளிப்படுத்தப் போதுமானது.

உலகமயமாக்கல் என்பது ஏதோ ஒரு வகையில் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதுடன் தொடர்புபட்டது. இவ்வாறு தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான சாதனமாக ஊடகங்கள் தான் உள்ளன. அதில் புதிய ஊடகங்கள் (New Media) எனச் சொல்லப்படும் சமூக ஊடகங்களின் பங்களிப்பு பிரதானமாக இருக்கின்றது. அதாவது உலகமயமாக்கலை விரைவுபடுத்துவதாக அதில் செல்வாக்கைச் செலுத்தக் கூடியவையாக ஊடகங்களே உள்ளன. உலகமயமாக்கல் தொடர்பாக ஆராயும் போது செய்மதித் தெலைக்காட்சிகள், இணையம், கணினிகள், திறன்பேசிகள் அதாவது ஸ்மாட்போன்கள் என்பன தான் சமூக கலாசார மாற்றங்களை ஏற்படுத்துவதில் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றன. தொலைவில் உள்ளவர்களுடனும் நெருக்கமான தொடர்பாடல் மேற்கொள்வதற்கான வழிகளை இவைதான் இலகுபடுத்துகின்றன. இது கல்வியை வர்த்தகத்தை எமது வீட்டு வாசலுக்கே கொண்டு வந்துவிடுகின்றது. இதன் மூலம் உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கி விட்ட நிலை இன்றுள்ளது. இதற்கான பிரதான பங்கை ஊடகங்கள் தான் வழங்கியுள்ளன.

உலகமயமாக்கலும் ஊடகங்களும் என்பது ஒரு பரந்து விரிந்த பரப்பு. விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒரு விடயம். ஆனால் இங்கு நேரம் கருதி சுருக்கமாக சில விடயங்களை மட்டுமே முன்வைத்துள்ளேன்.

**- பாரதி இராஜநாயகம்**

# உண்மைகள் உறைக்குமா?

வெயிலின் அகோரம் உடலை வாட்ட பேரப்பிள்ளையைத் தூக்கிக் கொண்டு, வெயில் பிள்ளைக்குச் சுடாமல் இருப்பதற்காகத் தனது சேலைத் தலைப்பால் தலையையும் உடம்பையும் மூடியபடி வந்து கொண்டிருந்தாள் சின்னம்மா.

கண்மணிக்கு ஊர் உளவாரம், விடுப்புக் கேட்பதென்றால் அலாதி விருப்பம். புருஷன்காரன் கண்மணியை விட்டுவிட்டு வேறு பெண்ணுடன் குடித்தனம் நடத்தப் போனதும் இதனால்த்தான் என்று ஊரில் பேசிக்கொண்டார்கள்.

"சின்னம்மா அக்கா எங்க தொலையாலயே?"

இவளோட கதை கொடுத்தால் விடமாட்டாள் என்று எண்ணிய சின்னம்மா... "பிள்ளைக்குச் சாடையான காச்சல் அதுதான் டாக்குத்தர் பாலாவிடம் காட்டி மருந்தெடுத்துக் கொண்டு வாறன்"

"ஏன் அக்கா தாய்காறி இப்போதைக்கு வரமாட்டாவாமோ? வயது போன நேரத்தில நீங்கள் ஏன் இப்பிடி கஷ்டப்பட வேணும். எல்லாத்தையும் விட்டுப்போட்டு கமலாவை வரச்சொல்லலாமே"

"வாறநேரம் பாத்துக் கொள்ளுவம். எனித்தான் சமைக்க வேணும் வாறன்"

"மருமேன் தவறணையில விழுந்து கிடக்கிறாராம்"

"உனக்கு யார் சொன்னது?"

" உங்க ஊர் உலகத்தில கதைக்கிறதைத்தான் சொன்னனன்"

"எனக்கு ஒன்றும் தெரியேல்ல கண்மணி. பிள்ளைக்கு மருந்து கொடுக்க வேணும் வாறன்"

"அம்மம்மா, அம்மா ஏன் வராமல் இருக்கிறா? அம்மா வந்து விட்டால் உங்களுக்குக் கஷ்டம் இருக்காதெல்லே"

"ஓம்பிள்ளை எதுக்கும் வீட்ட போய் தொலைபேசியில அம்மாவுடன் கதைப்பம்"

"அம்மா என்னோடையும் கதைப்பவே"

"உன்ர அம்மா உம்மொடதானே கதைப்பா"

அந்தப் பிள்ளைக்கு தாயின் முகம் தெரிந்து கொள்ள முடியாத இரண்டு வயதில் கணவனின் தொல்லை தாங்கமுடியாமல் மத்திய கிழக்கு நாட்டுக்குப் பணிப் பெண்ணாக தாயார் சென்று விட்டார்.

"அம்மம்மா, அம்மா எப்ப வருவா? மீண்டும் பிள்ளை கேட்டது.

"சீக்கிரம் வந்து விடுவா"

"அம்மா எப்ப போனவ"

"உனக்கு இரண்டு வயசில"

"இப்ப எனக்கு ஒன்பது வயசல்லோ. அப்ப அம்மா போய் ஏழு வருடமாச்சல்லே. ஏன் இவ்வளவு நாளும் வராமலிருக்கிறா"

"எடி மகள் உன்ர அம்மா யாரோ கேரளக்காரனோட போய்விட்டாவாம்."

"அம்மம்மா, அப்பா என்ன சொல்லு கிறார்"

"அந்தாள் விசரில ஏதோ கத்துது. நீ யோசியாமல் இரு.அம்மா கட்டாயம் வருவா"

"நீங்கள் பொய் சொல்லூறியள்"

"இல்ல மேனே கொம்மா கட்டாயம் வருவா"

"ஏன் கிழவி பிள்ளைக்கு பொய் சொல்லுறாய்"

"எட நாசமறுவானே செய்யிற எல்லாத் தையும் செய்து போட்டு இப்ப அவளைப் பற்றி தூற்றித் திரிகிறாய். நீ நல்லாயிருக்க மாட்டாயடா சண்டாளா.

"எடி கிழவி பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டு இரு"

"அவளுக்கு அடிச்சு நித்தம் கரைச்சல் தொலைகள் கொடுத்து வெளிநாடும் அனுப்பி வைத்து அவள் உழைக்கும் பணத்தில் சும்மாய் இருந்து சாப்பிடலாம் எண்டு எண்ணியெல்லோ அவளை அனுப்பினபடியால்த் தான்... பயந்து இஞ்ச வராமல் இருக்கிறாள் போலும்"

"விசர் கிழவி, அங்க இருக்கிற ஒவ்வொரு நாளும் கேரளத்துக்காரனோட காரில சுத்தித்திரிவ தாக அங்கு வேலை பார்க்கும் கந்தையாவின் மகன் சிவராசா வீட்டுக்கு அறிவிச்சவனாம் எண்டு கந்தையா என்னைக் கண்டு சொன்னவர்"

"கண்கெட்டுப் போவானே! குடிச்சு விட்டு வந்து என்ர பிள்ளையை ஏனடா தூற்றுகிறாய்"

"உண்மையைச் சொன்னால் கசக்கும் தான். பேப்பரில செய்தி வரேக்க உண்மை யெண்டு தெரியும்"

* * * *

"வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர் கள் நல்ல சம்பளம், இருப்பிடம், சாப்பாடு, மருத்துவ வசதி எல்லாம் கிடைக்கும் என்று ஆசை வார்த்தை காட்டி இளம் பெண்களைப் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடு களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அங்கு இருக்கும் முகவர்கள் இங்கிருந்து போகும் பெண்களை விற்பனை செய்கின்றார்கள். விற்பனை செய்யப் பட்ட பெண்கள் வீடுகளில் சிறை வைக்கப்பட்டு வேலை வாங்கப்படுகின்றார்கள். சம்பளம் இல்லை. போதுமான சாப்பாடு இல்லை. வீட்டு எசமான் தனது பாலியல் தேவைக்கு அவர்களை உள்ளாக்குகின்றான். வீட்டு எசமானியோ சிறு பிழை கண்டாலும் நெருப்புக் கம்பியைக் காய்ச்சி சூடு போடுவது, சுடுநீரை முகத்தில் ஊற்றுவது, அடிப்பது இப்படிப் பல தண்டனையை வழங்கு கிறாள். வீட்டுக் கஷ்டம் காரணமாக உழைத்து வரச் சென்ற எமது நாட்டுப் பெண்கள் சொல்லெ ணாத் துன்பங்களுடன் நரக வேதனை அனுப வித்துக் கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய காரணங்களால் உடல் உள ரீதியாகப் பெண் கள் பலர் பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள்."

என்று விமான நிலையத்தில் வேதனை யுடன் வந்திறங்கிய பணிப் பெண்கள் மத்தியில் வெளிநாட்டுவேலை வாய்ப்பு திணைக்கள அதிகாரி குட்டிப் பிரசங்கமே செய்து கொண்டிருந் தார்.

கமலாவும் வந்திருப்பாளோ என்று பார்க்கச் சென்ற தகப்பன் தம்பிமுத்தர் ஏமாற் றத்துடன் வீடு திரும்பி தன் மனைவிக்கு விமான நிலையத்தில் அதிகாரி கூறிய வற்றை சொல்லி அழுகிறார். கணவனின் வற்புறுத்தலால் சவுதி

அரேபியாவுக்குச் சென்ற கமலா ஏழு வருடங்களாகியும் எது வித தொடர்பும் அற்ற நிலையில் என்ன கஷ்டத்தை அனுபவிக்கிறாளோ! எவருக்குமே தெரியாத புதிராகவே இருக்கிறது. இது தாயின் புலம்பல்.

"இந்தகைய செயலால் பெற்ற தாய் பிள்ளையைப் பிரிந்த நிலையில் வாடுவதும், அம்மாவின் வரவை எதிர்பார்த்து ஏமாந்து நிற்கும் பிள்ளையும் மட்டுமல்ல வெளிநாட்டுக்குப் பணிப்பெண்களாச் சென்ற பலரின் குடும்பத்தவர்களும் ஏக்கப்பெருமூச்சுடனேயே இருப்பது வேதனையான சம்பவமாகவே இருந்து வருகின்றது" என்றார் தம்பிமுத்து

வீட்டில் இருந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்க முடியாமல் வழமையாகச் சந்திக்கும் தனது நண்பர் கூட்டத்தைக் காண கோயிலடிக்குப் புறப்பட்டார் தம்பிமுத்து.


"மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் சென்ற பலரின் சோகச் கதைகளைத் தெரிந்தும் தொடர்ந்தும் பல பெண்கள் அங்கு போகிறார்களே! ஏன் என்று தெரியவில்லை" என்று தம்பிமுத்தர் தனது உள்ளக் கிடக்கையை கோயில் பின் வீதியில் இருந்து உலக நடப்புகளை விவாதிக்கும் சகபாடிகளுக்குச் சொல்லுகிறார்.

"வறுமை, கடன்தொல்லை புருஷன் மாரின் கரைச்சல், வெளிநாடு பார்க்க ஆசை சுதந்திரமாகத் திரியலாம், உழைக்கலாம் என்ற எண்ணம் இப்படியான பல காரணங்களால் இளம்பெண்கள் பலர் பணிப்பெண்களாக வெளி நாட்டுக்குப் போகிறார்கள்" என்று பரமர் கூற எல்லோரும் ஆமோதிப்பதுமாதிரித் தலையை ஆட்டினார்கள்.

தம்பிமுத்தர் தன் மகள் கமலா என்ன காரணத்துக்காகப்போனாள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் பரமர் கூறுவதைக் கேட்டுக்கொண்டு இருந்தார். அவரது கணங்கள் பனித்து விட்டன.

**சு.உமாசங்கர்**
**இலண்டன்**

## இலக்கியப் பணியின் இலக்கு



சதா தேடலிலே ஈடுபட்டிருப்பது ஒர் எழுத்தாளனின் ஊழியமாகின்றது. ஓர் உயர்ந்த சமுதாயம் உருவாகுதல் வேண்டும் என்கிற ஆசை இந்தத் தேடலிலே ஓர் அம்சமாகின்றது. ஆனாலும் இந்தத் தேடல் ஏமாற்றமே தருகின்றது. போலி என்னும் போதையின் கிறக்கத்திலும், அகத்தின் உணர்வுகளுக்கும், புறச் செயல்களுக்கும் தொடர்புகள் அற்ற நிலையில் வேறொரு வகையாகவும் சொல்லலாம். மனிதன் உள்ளும் புறமும் வேறு வேறானவனாக வாழ்கின்றான். முகமூடிதாரிகளாக வாழும் மனிதர்கள், முகமூடிக்குள் வாழும் மனிதனின் உண்மைக் கோலம் என்ன? இத்தகைய தேடுதல் எழுத்தாளனின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகின்றது. இத்தகைய தேடல்களிலும் அவற்றின் அவதிகளிலேயும் வாழும் என்னுடைய கதைகளிலே - குறுங்கதைகளிலே பல இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்றேனும் மனித நேயம் பற்றிய மகா சிறிய சலனத்தையேனும் ஏற்படுத்துமாயின், அதுவே எனக்குக் கிடைக்கும் மாபெரும் திருப்தி.

**மூத்த இதழாசிரியர்**
**சசிபாரதி சபாரத்தினம்.**

# விடுதலைக் காதல்



காதலிலே விடுதலையென் றாங்கோர் கொள்கை
கடுகிவளர்ந் திடுமென்பார் யூரோப்பாவில்
மாதரெலாம் தம்முடைய விருப்பின் வண்ணம்
மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர்
பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே
பிரியம் வந்தால் கலந்தன்பு பிரிந்துவிட்டால்
வேதனையொன் றில்லாதே பிரிந்து சென்று
வேறொருவன் றனைக்கூட வேண்டும் என்பார்


வீரமிலா மனிதர் சொலும் வார்த்தை கண்டீர்
விடுதலையாங் காதலெனிற் பொய்மைக் காதல்!
சோரரைப்போல் ஆண்மக்கள் புவியின் மீது
சுவைமிக்க பெண்மைநல முண்ணுகின்றார்
காரணந்தான் யாதெனிலோ ஆண்க ளெல்லாம்
களவின்பம் விரும்புகின்றார்: கற்பே மேலென்று
ஈரமின்றி யெப்போதும் உபதேசங்கள்
எடுத்தெடுத்துப் பெண்களிடம் இயம்புவாரே!

ஆணெல்லாம் கற்பைவிட்டுத் தவறுசெய்தால்
அப்போது பெண்மையுங்கற் பழிந்திடாதோ?
நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டை சுட்டால்
நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ?
பேணுமொரு காதலினை வேண்டி யன்றோ
பெண்மக்கள் கற்புநிலை பிறழு கின்றார்?
காணுகின்ற காட்சியெலாம் மறைத்து வைத்துக்
கற்புக்கற் பென்றுலகோர் கதைக்கின்றாரே?

- பாரதி

தும்பு சிவா

# மார்க்சிசம்



**கார்ள் மார்க்ஸ், பிரெட்றிக் ஏங்கெல்ஸ் ஆகிய இரு மேதைகளும் விஞ்ஞான பூர்வமாக வகுத்து இந்த உல கத்திற்கு அளித்துச் சென்ற தத்துவார்த்த பொக்கிஷமே மார்க்சியமாகும். அன்றுவரை ஆதிக்கம் செலுத்தி வந்த பழமைவாதக் கருத்துமுதல் உலகநோக்கிற்கு எதிராக இயங்கியல் பொருள் முதல் வாதம் என்னும் புரட்சிகரமான உலக நோக்கை மார்க்சிசம் நிலை நிறுத்திக் கொண்டது.**



இத்தகைய மார்க்சிய உலக நோக்கானது பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு மட்டுமன்றி முழு மனிதகுல விடுதலைக்குமான தலைவிதியோடு தன்னை இணைத்துக் கொள்ளும் மாபெரும் வலிமையையும் பெற்றுக் கொண்டது.

மார்க்சிசத்தின் பின்னரான ஒன்றரை நூற்றாண்டு காலப் போராட்டங்களும் அவற்றின் விளைவான சோஷலிஸ வென்றெடுப்புக்களும் முதலாளித்துவத்திற்கு நேர் எதிராகவும் ஒரே மாற்றாக வும் இருப்பதற்கு ஆற்றல் பெற்ற மார்க்சிசமும் சோஷலிஸமும்தான் என்பதை நிரூபித்து வந்துள்ளன.

மார்க்சிசம் ஒரு விஞ்ஞானபூர்வமான தத்துவார்த்தத்தை முன்வைக்கின்றது. அத்துடன் அதுதன்னை நிறுத்திக் கொள்ளவில்லை. எவ்வாறு முதலாளித்துவத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை நடைமுறை ஆய்வுக்கு உட்படுத்தி தனது முடிவுகளை திடப்படுத்தி நிரூபித்துக் கொண்டதோ அவற்றை முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டமாகப் பிரயோகித்தும் மார்க்சிசம் வெற்றி கண்டுகொண்டது.

மார்க்ஸும் ஏங்கெல்ஸும் முதலாளித்துவ உற்பத்தி முறையில் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் பற்றிய துல்லியமான ஆய்வையும் தெளிவான வரையறை கொண்ட முடிவுகளையும் தமக்கேயுரிய மேதாவிலாசத்துடன் அணுகி ஆராய்ந்து கொண்டனர். அதன் மூலம் முதலாளித்துவம் நடைமுறைப்படுத்திவரும் கூலி அடிமை முறையின் உள்ளார்ந்த அம்சங்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் அம்பலத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தினர்.

அன்றைய முதலாளித்துவம் தன்னை வளர்த்து நிலை நிறுத்திக் கொள்வதற்கு உலக நாடுகளை அடிமைப்படுத்தி அந்நாடுகளின் விலைமதிப்பற்ற வளங்கள் அனைத்தையும் சூறையாடிச் சென்றது. காலனித்துவ அமைப்பை இறுக்கிக் கொண்டது. இத்தகைய முதலாளித்துவ வளர்ச்சியையும் அதன் ஈவிரக்கமற்ற சுரண்டலையும் மார்க்சிசம் நன்கு வெளிச்சமிட்டுக் காட்டியதுடன் நில்லாது அதற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கமும்அடக்கப்படும் காலணி நாடுகளும் போராட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியது.

முதலாளித்துவத்தின் கீழ் மனிதர்களின் உழைப்பு அதன் பெறுமதி, கூலி, விலை, இலாபம், உபரி உற்பத்தியும் உபரி மதிப்பும், விநியோகம் என்பவற்றின் அடிப்படைகள் கண்டறியப்பட்டன. முதலாளித்துவத்தின் ஒரே இலக்கு இலாபத்தைக் குவிப்பதும் மூலதனத்தைப் பெருக்குவதும் தான். மனிதர்களின் சமூகத் தேவைகளைப் பூர்த்திசெய்வதோ அன்றி அவர்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதோ அல்ல என்பதையும் மார்க்ஸும் ஏங்கெல்ஸும் தமது ஆய்வுகளின் மூலம் தெளிவுபடுத்திக் காட்டினார்கள்.

மார்க்சிசம் அது தோற்றம் பெற்ற அதே இடத்தில் அப்படியே இருந்து வந்த ஒன்றல்ல. அது தனது விஞ்ஞான அடிப்படைக் காரணமாக வளர்ச்சியுற்றது. மாபெரும் அக்டோபர் புரட்சியின் மூலமாக லெனினிசமாக வளர்ச்சி கண்டது. சீனப் புரட்சியின் ஊடாக மாஓசேதுங் சிந்தனையாக விரிவுபெற்றது. இன்னும் பல நாடுகளின் புரட்சிகளில் மார்க்சிசம் வளம் பெற்றுக்கொண்டது. முதலாளித்துவம் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக கடும்பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிந்துள்ளது. நாடுகளுக்கிடையே யுத்தங்களை ஏற்படுத்தி அந்நாடுகளின் வளங்களைச் சுரண்டியும் அழித்தும் வருவதோடு உள்நாட்டுப் போர்க்களுக்கும் ஊக்கம் கொடுத்து இன, மொழி, மத முறுகல்களை ஏற்படுத்தி குளிர்காய எத்தனிக்கிறது. உயிர் அழிப்புக்களை ஏற்படுத்தி மனித வாழ்வைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது. புலப்பெயர்வுகளும், அகதி முகாம்களும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ நாடுகள் அணு ஆயுதங்களை உற்பத்திசெய்து வைத்துக்கொண்டு ஏனைய நாடுகளை அடக்கியாள முனைகின்றன. பணம், பொருள் ஒரு சிலரிடம் குவிந்த கிடக்க பலர் ஏழைகளாக இருப்பதும் கண்கூடு, சுரண்டிச் சுரண்டி பலரை நாதியற்றவர்களாக்கி அவர்கள் சுகபோகம் அனுபவிக்கிறார்கள். துன்பங்களினால் துவண்டுபோன மக்கள் பல இடங்களிலும் பல நாடுகளிலும் குரல் கொடுத்துப் போராட முன் வந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் சக்தி இன்றைய காலகட்டத்தல் தலைகாட்டத் தொடங்கியுள்ளது.

இன்றைய உலகச் சூழலில் முதலாளித்துவம் ஏகாதிபத்திய நிலை நின்று தமது இராட்சத மூலதனம் கொண்டு உலகநாடுகளின் வளங்களைக் கொள்ளையிட புதிய புதிய வழிகளில் கங்கணம்கட்டி நிற்கின்றது. அதுவே உலகமயமாதல் என்னும் நிகழ்ச்சித் திட்டமாகும். பல்தேசியக்கம்பனிகள் மூலமாக பாரிய மூலதன ஊடுருவல் நடத்தப்படுகின்றது. முதலாளித்துவ நிலைப்புக்கான கருத்தியல்களும் கலாசார சீரழிவுகளும் வேகமாகப் புகுத்தப்பட்டு வருகின்றன. சமூக நலன் சார்ந்த சிந்தனைகளும் கருத்துக்களும் அவற்றுக்குச் சார்பான சோஷலிஸ எண்ணங்களும் குறிவைத்து அழிக்கப்படுகின்றன. எழுச்சிகள், போராட்டங்கள், சமூக மாற்றம் என்பன மறுக்கப்படு கின்றன. பழமைவாதம் ஆதிக்கவெறி அடக்குமுறை என்பன மீட்டு நிலைநிறுத்தப்படும் போக்கு வலுவடைகின்றது. இவை எமது நாடு உட்பட மூன்றாம் உலக நாடுகளில் முனைப்படைத்திருக்கும் நிகழ்வுப் போக்குகளாகும்.

எமது நாட்டைப் பொறுத்தளவில் ஏழை மக்கள் ஏழைகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறதோ தெரியவில்லை. கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆன இருப்பிடமின்றி லயன் காம்பறாக்களில் சொல்லணாத் துன்பங்களைஅனுபவித்தக் கொண்டிருக்கின்ற மலையக மக்கள் நிரந்தரமான தொழில் இன்றி உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றி வறுமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அரசியல்வாதிகளும் தொழிசங்கங்களும் கைவிட்ட நிலையில் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து குழுக்களாகத் தமது கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களையும்

போராட்டங்களையும் நடத்தி வருகின்றார்கள். முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உணர்வு கொண்டவர்களாகத் தோட்டத்தொழிலாளர்கள் உருவாகி வருகின்றார்கள்.

இத்தகைய சூழலில் மார்க்சிசம் - சோஷலிஸத்திற்கான தேவைகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளன. மார்க்சிசம் படிக்கப்படவேண்டியதாயும் சோஷலிஸத்திற்கான பல்வேறு வகைப்பட்ட போராட்டங்கள் நடத்தப்பட வேண்டியனவாகவும் உள்ளன.

எனவே, இன்றைய உலகமயமாதல் சூழலிலே மார்க்சிசம் தனது ஒட்டுமொத்த வளர்ச்சியின் ஊடே ஏகாதிபத்தியம் தோற்றுவித்து நிற்கும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னேறிச் செல்லும் வரலாற்றுக் கடமையை எதிர்நோக்கி நிற்கின்றது.

"மூலதனம் என்பது இறந்த உழைப்பு, அது இரத்தங் குடிக்கும் பிசாசு போல வாழும், உழைப்பை உறிஞ்சியே வாழ்கிறது. எவ்வளவு அதிக உழைப்பை அது உறுஞ்சுகிறதோ அவ்வளவு அதிகம் அது வாழ்கிறது"

- கார்ள் மார்க்ஸ்

# பெண்ணியம்



பெண்ணியம் பற்றி அனைத்து இடத்திலும் ஒரு குழப்பம் இருந்து கொண்டே தான் இருக்கிறது. இங்கு மட்டும் இல்லை எல்லா நாடுகளிலும் இருக்கிறது. அதை எப்படிப் பார்ப்பது பெண்களின் உடல் சார்ந்த மனநிலை சார்ந்த விஷயம் போன்ற அனைத்தையும் ஒரு குழப்பத்தோடு தான் பார்க்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை பெண் தன்னை ஒரு தனிநபராக, தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது என்பது இன்றைக்கு நமது சமுதாயம் நீ ஒரு பெண் என்ற அடை யாளத்தைச் சுமந்து கொண்டு தனியாகக் கஷ்டப்படும் சூழ்நிலையை தான் உருவாக்கி கொடுத்து இருக்கிறது. நிர்பந்தத்தையும் உருவாக்கி இருக்கிறது. அடையாளம் அவளுக்கு சுமையாக இருந்தால் அதிலிருந்து வெளியில் வரவேண்டும். அதன் மூலம் இருக்கக் கூடிய நெருக்கடிகள் பிரச்சினைகள் இந்தச் சமுதாயம் காட்டக் கூடிய விரோதங்கள் இருக்கிறது. ஒரு பெண்ணை ஆண் அவளுடையதாக அவளுடைய உலகமாக எப்படி அவன் பாரக்கின்றானோ அதே மாதிரியான விஷயங்கள் எல்லாமே பெண்களுக்கு சாத்தியமாக இருக்க வேண்டும். பெண்கள் இதுவரை பெண்கள் தனக்கு வைத்துக் கொண்டிருந்த அடையாளங்களைத் துறந்து விட்டு நான் தனி நீ தனி என்று இல்லால் பொதுவாக வாழ்க்கை முறைக்குபோக முற்பட வேண்டும். சிந்திக்கின்ற எல்லா விஷயத்தையும் சாத்தியமாக்குவது பெண்ணியம் என்பதற்கான சரியான அடையாளமாக இருக்கும்

**- கவிஞர் சல்மா**

# வெற்றியுடன் வாழ்வாங்கு வாழ

எமது பிறப்பே ஒரு வெற்றி. வாழ்க்கையின் முக்கிய அம்சமே வெற்றி. இவ்வுலகில் மனிதனாக வாழ விரும்பியதே வெற்றி "நல்ல எண்ணக்கருக்களை பயனுடையதாக மாற்றவேண்டும் என்ற நெறிப்பாடே வெற்றியின் இரகசியமாகும்" என அறிஞர் கென்றி உவாட் பீச்சர் கூறியுள்ளார்.

நாம் மாதா பிதாவின் அன்பின் சங்கமத்தின் நிமிர்த்தம் உருவாகி இருப்பதே உண்மை. எனவே வாழ்க்கையின் பிரதான அம்சம் வெற்றியே என ஆணித்தரமாகக் கூறுவதற்கு பல சான்றுகள் உண்டு. 'அலடினும் அற்புத விளக்கும்' என்ற அராபியக் கதையில் கூறப்பட்டது போல் நாம் புனிதமான நோக்கோடு தொட்டதெல்லாம் வெற்றியைத் தரும். எங்களுடைய உடன்பிறப்பே வெற்றி எனலாம். பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி வெற்றி பற்றிக் கூறியதைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். "எடுத்த காரியம் யாவினும் வெற்றி எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி". மனிதனாகப் பிறந்தவன் பலதரப்பட்ட நன்மைகளையும் இன்பங்களையும் பெற பகீரதப்பிரயத்தனத்தை மேற்கொள்ள முயலுவதே எமது தலையான கடமையாகும்.

இன்றைய பூகோளமயமான உலகிலே வாழ்க்கை ஒரு பஞ்சன மெத்தையாக அமையுமென எதிர்பார்க்க முடியாது. தீயசெயல்களாகிய களவு, கொலை, இனத்துவேஷம், கற்பழித்தல் போன்ற விரோதமான செயல்களும் உண்டு. எதிர்பாரத மாற்றங்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். அறிவுச் சமூகம், அறிவுப்பொருளாதாரம், அறிவுப் பிரவாகம் போன்ற எழிச்சிகளை விளங்கி அவற்றிற்கு அமைவாக நாம் எங்களை இற்றைப்படுத்தி, சவால்களைத் துணிவுடனும், 'பாம்பு தின்னுகின்ற ஊருக்குப் போனா நடுமுறி எனக்கு' எனக் கூறி வாழப்பழக வேண்டும். வகுக்கப்படுகின்ற வழிகளை விளங்கி, அந்த வழிகளில் வீறு நடைபோட்டால் வெற்றியுடன் வாழ்வது நிச்சயமாகும்.

இது தான் வாழ்வின் கலங்கரைவிளக்கு. விடாமுயற்சியும், விழிப்பும் வெற்றியின் படிகள் என்பதை மனதில் பதியவைக்க வேண்டும். எமது உள்ளார்ந்த உணர்வுகளைத்தட்டி எழுப்ப வேண்டும். உணர்சிகளை அடக்கி ஆழவேண்டும். நீர்வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தி விவாசாயத்துக்கும் வேறு தேவைகட்கும் பயன்படுத்த வேண்டும். ஆக்கபூர்வமான நற்செயல்களைப் புரிய வேண்டும். வினைவிதைத்தவன் வினையைத்தான் அறுவடை செய்ய வேண்டும். மனப்பாங்கு, மனோதிடம், சுயநம்பிக்கை போன்றவற்றை பொருத்தமான முறையில் உருவாக்கி உன்னதமான செயற்திட்டங்களை வகுக்க வேண்டும். உதாரண வாயிலாக விளக்கலாம். ஸ்கொத்திலாந்து தேசத்தில் பல சகாப்தங்களுக்கு முன் வாழ்ந்த ஒரு சாதாரண விவசாயியின் வாழ்விலே இடம் பெற்ற சம்பவத்தை ஆராய்வோம். சிறிய குடும்பம் என்பதனால் பத்துப்பரப்பு வயலில் உணவுப் பயிர்களைச் சாகுபடி செய்து பொழுதை வெற்றிகரமாகப் போக்கினான். வருடங்கள் உருண்டோடின. குடும்பம் பெருகத் தொடங்கியது. இரட்டிப்பான முறையில் தேவையான விதைகள், பசளை போன்றவற்றைப் பயன்படுத்தினான். இரட்டிப்பான விளைவு கிடைத்தது. மேலும் குடும்பம் விசாலமடைந்தது. மும்மடங்கு செலவை மேற்கொண்டு சாகுபடி செய்தான். ஆனால் மும்மடங்கான விளைவைப் பெறமுடியவில்லை. விளைவு

குறைவான விகிதத்தில் காணப்பட்டதை உணர்ந்தான். நல்ல அனுபவத்தை பெற்றான். உற்பத்தித் துறையில் ஒரு புதிய விதியை (Law) கண்டு பிடிக்க விவாசாயியின் முயற்சி வெற்றியாக மாறியது. குறைந்து செல்லும் விளைவு விதி" (Law of Diminishing Returns) இன்று எல்லோராலும் கடைப்பிடிக்கப்படுகின்ற விதியாகும். "முயற்சி திருவினையாகும்" என்றதற்கு அமைய முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்.

எமது கவனம் ஒன்றிலேயே நிலைத்து நிற்கவேண்டும். அவநம்பிக்கையைத் துரத்த வேண்டும். இங்கிலாந்து தேசத்து ஏற்பேட் புருஸ் என்னும் மன்னன் வேறு ஒரு நாட்டுடன் இரண்டு முறைகள் போர் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. தோல்வி அடைந்தான். துக்கத்தில் மனம் குலைந்தது. கட்டிலில் படுத்தான். நித்திரை கொள்ள முடியவில்லை ஒரு சிலந்தி தவறுதலாக உட்கூரையிலிருந்து கீழே வரக்கூடியதாக அமைந்தது. அது மேலே போவதற்கு முயற்சித்தது. ஆனால் முயற்ச்சிகளைக் கைவிடாது ஒன்பதாவது முயற்சியில் வெற்றியடைந்தது. அரசனும் மூன்றாவது போருக்கு ஆயத்தங்களை மேற்கொண்டு வெற்றியடைந்தான். இப்படியாகப் பல உதாரணங்கள் உண்டு.

நம்முடைய வாழ்க்கையில் பூரணமான விருப்பத்துடனும் எழுச்சியுடனும் கவனத்தைச் செலுத்தினால் வெற்றிக்குரிய வாய்ப்புகள் அதிகமாகும். ஒவ்வொருவரிடமும் ஒரு தங்கச் சுரங்கம் மறைந்து கிடக்கின்றது. அதற்குரிய திறவுகோலும் அவர்களிடம் உண்டு. அவர்களே தேடவேண்டும்.

ஆங்கில அறிஞர் செஸ்ரர் பீல்ட் கூறிய சொற்களை ஆராய்தல் நன்று. "நான் ஒரு மனிதன் எனக்கு அரியதொரு ஆற்றல் இருக்கின்றது. எனக்கு என்றுமே தோல்வியே கிடையாது".

போர்களத்தில் உள்ள ஒரு வீரன் கட்டாயமாகப் போர்புரிந்தே ஆகவேண்டும். நாம் பயனற்ற வாதங்களை மேற்கொள்ளாது தோல்வி மனப்பாங்கை விரட்டியடிக்கவேண்டும். மகாபாரதப் போரில் அர்ச்சுனனின் மனோதிடமும், நம்பிக்கையும், சாதுரியமும் வெற்றிக்கு மேல் வெற்றி பெறச் செய்தமை அவதானிப்புக்குரியது.


நாம் நம்மையே, மதிக்க வேண்டும். விசுவாசமாக நேசிக்க வேண்டும். நம்பிக்கையீனம் அகற்றப்பட வேண்டும். எமக்கு தீங்கானவற்றை வெறுக்க வேண்டும். கண்ணியம், கடமை, கட்டுப்பாடு எமது மகுடவாக்கியமாக அமைய வேண்டும். உண்மை உயர் நெறியாகும். எனவே உண்மையின் உணர்வோடும், அன்போடும் அறிவோடும் வாழ்தலே வெற்றி. பலர் பல பெரியார்களின் நன்நெறிகளை விழுமியங்களைப் பின்பற்றி வெற்றியுடன் வாழும் பொழுது நாம் ஏன் தோல்வி பற்றிச் சிந்திக்க வேண்டும். ஒரு ஆங்கிலக் கவிதையின் முதற்பந்தியில் குறிப்பிடப்பட்டதைக் கேட்டு இன்புற்று நல்வாழ்வு வாழப்பழகுவோம்.

"மறைந்த பெரியோர்கள், நாம் மேலான வாழ்வு வாழ்வதற்கு காலம் என்னும் மண்ணிலே தமது அடிச் சுவடுகளைப் பதித்து சென்றுள்ளார்கள்"

எனவே வாழ்க்கை என்னும் யுத்தத்தை (Battle) மகிழ்ச்சிகரமான நம்பிக்கையுடனும், வீரமும், தைரியமும் நிறைந்த சிரிப்புடனும் எதிர்கொண்டால் வெற்றிக்கு மேல் வெற்றியே. வெற்றி விழா எடுப்போமாக! வாழ்வாங்கு வாழ்வோமாக!

**- வடகோவை பூ.க. இராசரத்தினம்**

# புதினம்




உலகத் தலை நகர் இலண்டனில் வெளிவரும் "புதினம்" பத்திரிகை 20ம் ஆண்டு நிறைவைக் கண்டு சாதனை படைத்திருக்கிறது.

மொழியால், மதத்தால், கலாசாரத்தால், இனத்தால் மாறு பட்டும், வேறுபட்டும் உள்ள ஒரு நாட்டின் 20 ஆண்டுகள் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தொடர்ந்து வெளிவருவது புதினத்தில் புதினமாகும்.

உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது இலங்கை ஒரு குட்டி நாடு. ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நாடு. அந்தச் சிறிய நாட்டின் சிறிய சனத்தொகையான தமிழர்களின் சாதனைக்கு அணிகலனாக "புதினம்" வெளிவரு வது பெருமைக்குரியது.

"புதினம்" "தமிழர்களின் இதயம் கவர்ந்த தனித்துவ இதழ்." இது "புதினம் பத்திரிகையின் இதய தாகம்.

ஒரு இனத்தின் இதய தாகத்தின் அளவுகோல் பத்திரிகைகள்தான் என்பதை உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் பத்திரிகைச் சுதந்திரம் என்னும் யாப்புக் கூட இருக்கிறதைக் காணலாம்.

ஒரு இனம் தனது அபிலாசைகளை மற்றவர்களுக்கு தெரியப்படுத்த பத்திரிகைகள் தான் உதவுவதைக் காண்கிறோம்.

"சிறுதுளி பெரு வெள்ளம்" என்பதைப் போல "புதினம்" தமிழர்களின் தாகத்தைப் பிரதிபலிக்கும் ஏடாக வெளிவருவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

பத்திரிகை நடத்துவது மிகவும் கஷ்ட மான தொழில். பணபலம் படைத்தவர்களால் மட்டும்தான் பத்திரிகைகளை நடத்த முடியும் என்பது உலகறிந்த உண்மை.

பணபலம் அற்றவர்களும், மற்றவர்கள் கையை நம்பி பத்திரிகைகளைப் பிரசுரிக்க களம் இறங்கியவர்களில் பெரும்பாலானோரும் இன்றில்லை. இதற்குக் காரணம் பத்திரிகை களை அச்சுப்பதித்து வெளியிடுவது, விநியோ கிப்பது போன்றவற்றிற்கு ஏற்படும் கட்டுக் கடங்காத செலவுகளுமேயாகும்.

20 வருடங்கள் ஒரு இமயச் சாதனை. இவற்றை எல்லாம் பார்க்கும் போது 20 வருடங் களாக "புதினம்" வெளிவந்திருப்பது இமயச் சாதனை எனலாம்.

இலங்கைப் பத்திரிகைகள் பற்றிய கண்ணோட்டத்தை இங்கு பகிர்வது பொருத்த மாக இருக்கும் என நினைக்கின்றேன்.

பத்திரிகை பிரசுரிப்பதில் ஈழத் தமிழர்கள் சிலர் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள். அச்சு இயந்திரம் அறிமுகமான காலத்தோடு ஒட்டியவர்கள் இவர்கள்.

சைவப்பிரகாச அச்சு இயந்திரசாலை யில் 1889 ஆண்டு "இந்து சாதனம்" என்னும் பெயரில் பத்திரிகை ஆங்கிலத்திலும், தமிழிலும் மாதம் இருமுறை வெளிவந்திருக்கிறது.

கல்விமான்கள் தெல்லிப்பளை செல்லப்பா பிள்ளை, வழக்கறிஞர் கதிரவேலு, நல்லூர் கைலாசபிள்ளை உட்படபலர் ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

சுன்னாகத்திலிருந்து வெளிவந்த மாதம் இருமுறைப் பிரசுரமான "ஈழகேசரி" இப்படிப் படிப்படியாக வளர்ச்சி கண்டு, பின்னர் முதலாவது பிராந்திய தினசரியாக அமரர் கே.சி.தங்கராசா, டாக்டர் கே.சி.சண்முகரத்தினம் சகோதரர்களினால் வெளியிடப்பட்ட "ஈழநாடு" அதைத் தொடர்ந்து பின்னர் வெளிவந்த திரு.சாமி அவர்களின் "தினக்குரல்", திரு.சரவணபவன் அவர்களின் "உதயன்" எனப் பத்திரிகைகள் வெளிவருகின்றன.

தேசியப் பத்திரிகைகளாகவும் தலை நகர் கொழும்பில் இருந்து தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்தன.

தமிழ் நாட்டிலிருந்து தொழில் வாய்ப்புத் தேடிவந்த செட்டியார்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரான திரு.சுப்பிரமணியம் செட்டியாரினால் ஆரம்பிக்கப்பட்ட "வீரகேசரி", ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் மட்டும் பத்திரிகைகளை வெளியிட்ட திரு.டி.ஆர். விஜயவர்த்தனா அவர்களின் லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "தினகரன்", தமிழர்களின் அரசியல் போராட்டத்துக்குப் பக்க பலமாக இருக்க திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட "சுதந்தரன்", எம் டி.குணசேன நிறுவனத்தின் "தினபதி" ஆகிய பத்திரிகைகளைக் குறிப்பிடலாம்.

பத்திரிகைகளை ஆரம்பித்தவர்கள் மக்கள் மனங்களிலும் வாழ்க்கையுடனும் அவர்களின் அபிலாசைகளுடனும் சங்கமித்தவர்களாக வாழ்ந்து வருவதைக் காணலாம்.

"புதினம்" ஆசிரியர் அன்பு நண்பர் திரு.ஈ.கே.ராஜகோபால் அவர்கள் மேற்குறிப்பிட்டவர்களின் மதிப்புமிகு பட்டியலில் இடம் பெறுவதும் பெருமைதருகிறது.

பத்திரிகை ஒன்றின் பதிப்பாளராகவும் அதன் ஆசிரியராகவும் செயற்பட்ட பெருமை நண்பர் ராஜகோபாலையே சாரும். அவர் பணிதொடர வாழ்த்துக்கள்.

**- பொன் பாலசுந்தரம்**
பெரிய பிரித்தானியா



## மறைந்தும் மறையாத 'யாழ் விருது' நாயகன்
## உயர்திரு.திருநாவுக்கரசு இராசநாயகம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உயரிய 'யாழ் விருது பெற்ற சாதனை நாயகன் திருமிகு இராசநாயகம் இமயமென உயர்ந்து நின்றார். 'பணிபுரி பலனை எதிர்பாராதே' என்ற கூற்றுக்கு இலக்கணமாக மக்கள் பணியே மகேசன் பணி' என்ற உன்னதமான நோக்கத்திற்கு அமைவாக வாழ்க்கையின் பெரும்பகுதியை சேவை மனப்பான்மையுடனான நற்பணிகளுக்கு உரமிட்ட பெருந்தகையாகத் தரணியே போற்ற உயர்ந்து நின்றார்.

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவா சிறுவர் இல்லத்தின் அனாதரவான குழந்தைச் செல்வங்களுக்கு மாதா, பிதா, குரு, தெய்வமாக இருந்து அவர்களின் நல்வாழ்வுக்காக அயராது பணியாற்றி வந்த மனிதமாமணி, மனிதநேயச் செம்மல் பெருமதிப்புக்குரிய இராசாநயகம் ஐயாவின் ஒப்பற்ற பணியை மனமகிழ்ச்சியுடன் வாழ்த்தி 'தாயக ஒலி' பெருமை கொள்கின்ற அதேவேளை அவரது மறைவை அறிந்து ஆறாத்துயரில் ஆழ்ந்து நிற்கின்றது.

# பேராசை பெருந்துயர்

ஓர் ஊரிலே, மிகவும் தரித்திரனாகிய ஒருவன் விறகு வெட்டிச் சுமந்து விற்று, அதனாலே சீவனஞ் செய்து வந்தான். அவன் ஒருநாள், சமீபத்தில் விறகு வெட்டக் கிடையாமையினால் மிகுந்த தூரத்தில் ஓர் ஆற்றங்கரையில் உள்ள காட்டிற்குப் போய், அதன் கரையிலே பட்டுச் சாய்ந்து நிற்கும் மரத்தைக் கண்டு, கோடாலி கொண்டு அதைத் தறித்தான். கோடாலி கழன்று, ஆழமாய்ப் பெருகியோடும் ஆற்று வெள்ளத்துள் வீழ்ந்தது.

பசி தாகங்களினாலே மிகவும் களைப்படைந்த அவ்வேழையானவன் 'இனி என்ன செய்வேன்' என்று மனவருத்தமடைந்து, அழுதுகொண்டு நின்றான். அப்பொழுது அக்காட்டிலிருக்கும் வன தெய்வ மானது அவனுக்கு எதிரே வந்து, 'ஏன் அழுகிறாய்' என்று கேட்டது. அவன் நடந்ததைச் சொன்னான். உடனே அத்தெய்வம் அவனுக்காக இரங்கி, அவ்வாற்று வெள்ளத்துள் இறங்கி மூழ்கித் தடவிப் பார்த்து, ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக் கொண்டு வந்து காட்டி, 'இதுதானா உன் கோடாலி?' என்று கேட்டது. அவன் 'அன்று' என்றான். அத்தெய்வம் பின்னும் மூழ்கித் தடவிப் பார்த்து, ஒரு பொற்கோடாலியை எடுத்துக்கொண்டு வந்து காட்டி, 'இதுதானா?' என்று கேட்டது. அவன் அதனையும் 'அன்று' என்றான். அத்தெய்வம் பின்னும் ஒரு முறை மூழ்கித் தடவிப்பார்த்து, ஓர் இரும்புக் கோடாலியை எடுத்துக் கொண்டு



வந்து காட்டி, 'இதுதானா?' என்று கேட்டது. அம்மனிதன் அது தன் கோடாலியாயிருக்கக் கண்டுமிகுந்த சந்தோஷத்தோடு 'இதுதான் என் கோடாலி' என்று சொல்லி அதனை எடுத்த நன்றிக்காக அத்தெய்வத்தைத் துதித்தான்.

தெய்வம், அவனுடைய சத்தியத்தையும் உறுதியையும் புகழ்ந்து தான் எடுத்த கோடாலிகள் மூன்றையும் இன்னும் அநேக திரவியங்களையும் பல வரங்களையுங் கொடுத்து அவனை ஆசீர்வதித்துப் போனது. அத்தரித்திரன் அவைகளைப் பெற்றுப் பெருஞ் செல்வனாய்த் தன் குடும்பத்தாரோடு மகிழ்ந்து வாழ்ந்தான்.

இந்தச் சமாசாரங்களை விசாரித்தறிந்த வேறொரு விறகுகாரன், தானும் இவனைப் போலச் செல்வனாக வேண்டும் என்று எண்ணி, அந்த காட்டில் ஆற்றோரத்திலே விறகுவெட்டிக், கோடாலியை ஆற்றிலே நழுவ விட்டு நின்று அழுதான். அப்போதும் அவ் வனதெய்வம் முன்போல் ஆற்று வெள்ளத்துள் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக் காட்ட அவன் மிகுந்த சந்தோஷத்தோடு 'இதுதான் என் கோடாலி' என்றான். தெய்வம் கோடாலியை ஆற்றினுள் எறிந்துவிட்டு அவனைக் கோபித்து நித்திய தரித்திரனாகும்படி சபித்தது. அவன் பேராசை காரணமாகச் சொல்லிய ஒரு பொய்யினால் முன்னையினும் மிகுந்த தரித்திரனாய்ப் பெருந்துன்பத்தை அனுபவித்தான்.

**தொகுப்பு : சைவப்புலவர் சு.செல்லத்துரை**

**அறிந்ததை சொல்ல வந்தோம்**

# ஈழநாடு சென்றுவந்தேன்

யாழ்ப்பாணத்தவரான அரியரத்தினம் என்பவர் திருச்சியில் என்னை வந்து சந்தித்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வல்வெட்டித்துறை இலவச வாசகசாலை ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்ற நீங்கள் வரவேண்டும் என்று அவர் என்னை அழைத்த போது நான் திடுக்கிட்டுவிட்டேன்.

இருபத்தாறு மைல் இடைவெளியில் இருபெரும் கடல்களை இணைக்கும் சிறிய ஜலசந்தியில் இரண்டரை மணிநேரக் கப்பல் பிரயாணம் நாடுவிட்டுநாடு போவதற்கான இருபுறத்து அரசாங்க அனுமதிச் சீட்டுக்கள், மண்டபம் முகாமில் சுகாதாரப் பரிசோதனை, தனுஷ்கோடியிலும் தலை மன்னாரிலும் சுங்க அதிகாரிகள் பரிசோதனை இத்தனைக்கும் ஈடுகொடுத்து இடியப்பமும் சொதியும் மட்டும் சாப்பிட்டுக் கொண்டு இலங்கை சென்று திரும்புவதென்றால் பெரிய காரியமாகத்தான் தோன்றியது.

தேங்கிக் கிடந்த தமிழ் இலக்கியம் சலனமடைய ஆரம்பித்த காலத்தில் அரிய செயல்புரிந்த ஆறுமுக நாவலர் அவர்களை ஈன்றெடுத்த யாழ்ப்பாணத்தைக் காணவேண்டுமென்ற யாத்திரை உணர்ச்சி நெடுநாளாக எனக்கு உண்டு. அத்துடன் இன்றைய 'மறுமலர்ச்சி' இலக்கிய உலகில் எங்களுக்கு ஏற்கனவே ஈழத்தில் நன்கு அறிமுகமாயிருந்த அன்பர்களான திருவாளர்கள் சிவபாதசுந்தரம், சிவஞானசுந்தரம், சி.வைத்திலிங்கம், அம்பிகைபாகன், நாவற்குழியூர் நடராஜன் போன்ற எழுத்தாளர்களைச் சந்திக்கலாமென்ற மகிழ்ச்சியும் உண்டாயிற்று. அத்துடன் தமிழ்ப் பத்திரிகை அல்லது புஸ்தகம் எதுவானாலும் சுமார் மூன்றில் ஒரு பாகம் விநியோகமாகும் ஈழநாட்டு வாசகர்கள் எப்படியிருக் கிறார்கள் என்று பார்ப்பதும் இன்றியமையாதது தானே என்ற நிலையில் ஈழநாடு சென்று வந்தேன்.

**திருலோக சீதாராம் (1946 இல் எழுதிய கட்டுரையிலிருந்து...)**

# பின்தங்கிய பாடசாலைகளின் கல்விக் குறைபாடுகள்

இலங்கையில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் கல்விநிலை பெரும் சவால்கள் நிறைந்ததாகவே உள்ளது. பௌதீகவளப் பற்றாக்குறையை நோக்குவோமானால் கட்டட, தளபாட வசதிகள் இன்மையால் மரங்களுக்குக் கீழும், தரையிலிருந்தும் படிக்க வேண்டிய நிலையில் மாணவர்கள் உள்ளனர். வெய்யிலின் அகோர வெப்பம் ஒரு புறம் வாட்டும். மழை பெய்தால் தண்ணீரில் நனைய வேண்டிய அபத்தம். இந்த நிலையில் மாணவர்களின் கல்வி பெரும்பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. சில பாடசாலைகளில் மலசலகூட வசதிகளும் போதுமானதாகவும் இல்லை. சுத்தமான குடிநீருக்கான தட்டுப்பாடும் உண்டு. அண்மையில் ஓலையால் வேயப்பட்ட ஒரு பாடசாலைக் கட்டடம் முற்றாக எரிந்து தளபாடங்களும் தீக்கிரையாகிய சம்பவம் நடந்தேறியுள்ளது. கற்றல் நடவடிக்கைள் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் மாணவர்களின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து ஆசிரியர் பற்றாக்குறையை நோக்குவோமானால் இதுவும் பரிதாபத்துக்குரியதே. பல கிராமப்புறப் பாடசாலைகளில் அசிரியர் பற்றாக்குறை பெரும் சவாலாகவே உள்ளது. ஒன்று மாணவர்களின் தொகைக்கு ஏற்ற அளவு ஆசிரியர்கள் போதாத நிலை. இரண்டாவது சில முக்கிய பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை. மூன்றாவது தூர இடங்களில் இருந்து தினமும் கற்பிக்க வந்துபோகும் ஆசிரியர்களின் அசமந்தப் போக்கு, நான்காவது புதிதாகப் பதவி ஏற்றுக்கொண்ட ஆசிரியர்களும் அங்கு நிலைத்து நிற்க விரும்பாது நகர்ப்புறப்பாடசாலைகளை நோக்கி மாற்ற மெடுத்துச்செல்லும் சுயநலப் போக்கு, ஐந்தாவது மாணவர்களின் கல்வியை அர்ப்பணிப்புடன் செயலாற்ற விரும்பாத ஆசிரியர்களின் மனோநிலை. ஆறாவது அதிபர்களும் ஆசிரியர்களும் தங்களுக்குள் ஏற்படும் தனிப்பட்ட போட்டி பெறாமைகளும் மாணவர்களின் கல்வியைப் பெரிதும்பாதிக்கும் நிலை. ஏழாவது ஆசிரிர்கள் தங்களுக்கு வேண்டியவர்களின் பிள்ளைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் மற்றப் பிள்ளைகளைத் தரம் குறைவாக நினைத்துப் பாகுபாடு காட்டுவதும் தண்டிப்பதும் பொதுவாக மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைப் பாதிப்பதாக அமைவதும், எட்டாவது சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் சமூகத்துடனான நல்லுறவைப் பாடசாலைகள் முன்னெடுக்கத் தவறுவதும் ஒன்பதாவது சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட சமுதாயச் சீர்கேடுகளைக் கண்டுகொண்டு அதை மூடிமறைக்க முற்படும் போக்கும், பத்தாவது கல்வி கற்க வந்த மாணவர்களை சில அதிபர்களும் ஆசிரியர்களும் தமது சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்தும் நிலமையும் இப்படிப்பட்ட பல காரணங்களால் மாணவர்களின் கல்விமுன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டேயுள்ளது. பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாக இருப்பதால் அவர்களை உரிய முறையில் வழிநடத்தவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கே உண்டு என்பதை அவர்கள் ஆத்மாத்தமாக உணர்ந்துசெயற்பட வேண்டும்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை கல்வி பயிலும் 89 மாணவர்களுக்கு கல்விபுகட்ட ஒரு ஆசிரியர்தானும் இல்லாத நிலையில் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களின் நிலை எப்படி இருந்திருக்கும் என்பதை உணர்ந்து பார்க்கவே முடியவில்லை. நீண்ட காலத்திற்குப் பின் ஓர் இரு ஆசிரியர்கள் அப்பாடசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார் களாம்.


பதுளை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத பெரும் குறை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுபற்றி மாணவர்களும், பெற்றோரும் கவன ஈர்ப்புப் போராட்டங்களையும் மேற்கொண்டுவருகிறார்கள். நகர்ப்புறப் பாடசாலை களில் பௌதீக வளங்களும். தேவைக்கு அதிகமான ஆசிரியர்களும் இருக்கும் போது பின்தங்கிய பாடசாலைகளின் நிலை தலைகீழாக உள்ளது. இதைத்தான் எல்லோரும் தொடர்ந்து பேசி வருகிறார் களே தவிர அதன் பயன்பாடு முயற்கொம்பாகவே இருக்கின்றது.

அதேவேளை வேடிக்கையான ஒரு சம்பவமும் பதிவாகியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பாடசாலையில் இரண்டு மாணவர்கள் மட்டுமே கல்வி பயில்கின்றனர். அங்கு ஒரு ஆசிரியர் அவரே அதிபருமாவார். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அந்தப் பாடசாலைக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்டுவதில்லை என்று அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார். பாடசாலை இருந்தும் மாணவர்கள் இல்லாத நிலை.

பொதுவாக நோக்குமிடத்து வடமாகாணப் பாடசாலைகளின் கல்வித்தரம் பின்தங்கிய நிலையில் இருப்பதாகச் சொல்லப்படும் அதேவேளை, பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளின் நிலை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதற்குப் பொறுப்பானவர்கள் இப்பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என வேண்டுகின்றோம்.

- தேடலோன்

# பெண்ணின் அழகுதரும் இன்பம்



அடடா இவள் தேவதையோ! வண்ண மயிலோ! காதில் கம்மல் அணிந்துள்ளதால் மனிதப்பெண்தானே! என் நெஞ்சம் அலை மோதித் தவிக்கிறதே! நான் அவளைப் பார்த்ததும் அவளும் என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வையின் அழகு கண்களான வேலால் என்னைக் குத்துவது போல அல்லவா இருக்கிறது. எமனின் கடுமையைப் பற்றி நான் அனுபவித்ததில்லை. அழகான பெண் கண்களால் பார்த்து கொல்வதே என அறிந்து கொண்டேன். இவளோ பெண் தன்மையுள்ள எளிய அழகி, இவளது கண்கள் மட்டும் என்ன! பார்வையால் கொல்வதுபோல அமைந்துள்ளதே! எமனைப் போல உயிரைக் கொல்கிறது. கண்ணோ இனிதாக இருக்கிறது. மானைப் போல மருள்கிறது. இவள் பார்வை இந்த மூன்றையும் செய்கிறதே! இவளது புருவங்கள் வில்போல வளையாமல் நேராக இருந்து மறைந்தால் கண்கள் என்னை நடுங்கும்படி துன்பம் செய்யாது. இந்த அழகியின் நிமிர்ந்த மார்புகளுக்கு மேல் உள்ள ஆடை மதம் பிடித்த யானையின் மேலிட்ட முகம்படாம் போல இருக்கிறதே! போரில் எதிரிகள் பயப்படும் என் வீரமானது இவளது அழகிய நெற்றியைப் பார்த்ததும் தோற்று விட்டதே. புள்ளி மானைப் போன்ற அழகிய பார்வையும் நாணமுமே இவளுக்கு நகைகளாக இருக்கும் போது வேறு நகைகள் எதற்காக. மதுவானது குடித்தவரை மட்டுமே மயக்கும். ஆனால் இவளால் வந்த காமமோ பார்த்தவுடன் மயக்கி விட்டதே!

இப்படியாகப் பெண்ணைப் பற்றி யார் சொல்லியிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்களா? வேறுயாருமல்ல பொய்யமொழிப்புலவர் திருவள்ளுவர்தான் சொல்லியிருக்கிறார் என்றால் பாருங்களேன்.

(திருக்குறள் அதிகாரம்-109)

# அவன் அப்படித்தான்

இந்தச் சமுதாயத்தோடு அவனுக்கு இணங்கிப் போகவே முடியவில்லை. அதனால், அவனுக்கு எப்போதும் யுத்தம்தான். இந்த யுத்தத்தைத் தனி ஒருவனாகவே நின்று செய்தான். வீடும் அவனுக்கு சில சமயம் யுத்தகளமாக மாறுவதுண்டு.

அவனது எதிரிகள் சாதாரணமானவர்கள் அல்ல. பெரிய பெரிய மனிதர்கள். அதிகாரமும் அந்தஸ்தும் உள்ளவர்கள். உயர்ந்த இடத்தில் பசையாக ஒட்டிக் கொண்டிருப்பவர்கள். இந்த மனிதர்களை எதிர்ப்பது அவ்வளவு எளிதல்ல என்று அவனுக்கு நன்கு தெரியும். ஆனாலும் எதிர்த்தான். அவனது சத்திய வேட்கை அவனை ஓர் அருச்சுனனாகவே ஆக்கியது.

காண்டீபத்திற்குப் பதிலாக அவனது கையில் பேனா இருந்தது. அதனிடமிருந்து எந்த நேரத்திலும் சொல் அம்புகள் பாய்ந்து செல்லும். துரோணர், பீஸ்மர் போன்ற பலசாலிகளைக் கூட அந்த அம்புகள் துளைத்தெடுத்தன. ஆனாலும் அவனது குறி துரியோதனர்கள்தான். அதுவரை அவனது பேனா என்னும் காண்டீபம் அவனது கையில் சுழன்று கொண்டே இருக்கும்.

நீதி நியாயத்தின் பக்கம் அவன் நிற்கின்ற காரணத்தினால் தான் குழப்பக்காரன், பிரச்சினைக்காரன் என்ற பட்டங்கள் அவனைத் தேடி வருகின்றன. இந்தப் பட்டங்கள் அவனது மக்களையும், அவனை ஒரு மாதிரியாகப் பார்க்க வைத்தன. ஆனாலும் அவன் சோர்ந்து போகவில்லை. இலட்சியமா? இனசனமா? என்ற கேள்வி எழுந்தபோது அவன் இலட்சியம் என்றே பதிலிறுத்தான்.

இந்தப் பதில், அவனைப் பிழைக்கத் தெரியாதவன் என்றே காட்டியது. பலரும் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

பரிகாசம் பண்ணினார்கள். ஆனாலும் அவன் சாதாரணமாகவே சொன்னான், நான் பச்சோந்தி அல்ல. எனது நிறம் எப்போதும் ஒன்றுதான். குறுக்கு வழிகளுக்குள் என்னை நான் என்றுமே கொண்டு செல்வதில்லை. பள்ளம், குழிகள் இருந்தாலும் பாதை ஒன்றுதான், பயணம் மட்டும் நிற்காது.

அவனது இந்தப் பிரகடனத்தைக் கேட்டவர்கள் இன்னும் அதிகமாகவே சிரித்தார்கள். பெரிய மகாத்மா...

எந்தப் பட்டமும் பரிகாசமும் அவனை எதுவும் செய்யவில்லை. அவன் தன் நோக்கத்தில் உறுதியாகவே இருந்தான்.

சின்னஞ் சிறு வயதிலேயே சிந்தனையில் ஊறியவன் அவன். புத்தகங்களையும் அவன் நிறையவே படித்தான். ஆனால் அவனுக்கு அவற்றில் போதிய நம்பிக்கை இருக்கவில்லை. அவற்றால் திட்டவட்டமான சில கொள்கைகள் மக்களிடம் திணிக்கப்படுவதாகவே அவன் உணர்ந்தான். அப்படியானால் சுதந்திரம்... விடுதலை... சுயதேடல் என்ற சொற்களுக்கு என்னதான் பொருள்?

அன்று அவன் தனிமையிலே இருந்தான். அவனைப் பற்றி ஒரு பெரியவர் சொன்ன வார்த்தைகள் அவனை அரித்துக்கொண்டிருந்தன. அவற்றை அவனால் சீரணிக்க முடிய

வில்லை. எப்படிப்பட்ட வார்த்தை? அதை எவ்வளவு எளிதாக அவர் சொல்லி விட்டார்? அதுவும் இன்னும் ஒருவர் முன்னால்...

சுயமரியாதைக்காரன் அவன் - அதனால் அந்த வார்த்தைகள் அவனை அதிகமாகவே சுட்டுப்போட்டன. அவன் படித்தவன். அதனால் தான் அந்தப் பெரியவர் அன்று தப்பித்துக் கொண்டார். பெரியவருக்கு அவரது அந்தஸ்தும் ஒரு பெரிய அரணாகவே இருந்தது. இப்போது அவனுக்குத் தன் படிப்பு மீதே கோபம் ஏற்பட்டது.

இந்தப் படிப்பு எதற்கு? ஆமையாக அடங்கிப் போகவா? அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

பொருளாதாரம் தான் இந்தச் சமுதாயத்தின் அனைத்துப் பாவங்களுக்கும் பொறுப்பு என்பது அவனுக்குத் தெரியும். அவன் அந்தப் பெரியவர் முன் அடங்கிப் போனதற்கும் அந்தப் பொருளாதாரம்தான் காரணம். ஆனாலும் - அப்படி அடங்கிப் போனதற்காக உண்மையிலேயே அவன் வெட்கப்பட்டான்.

இந்தச் சமுதாயத்தை மீட்க, இனி எந்த யேசுநாதரும் வரமாட்டார் என்று அவன் நன்றாகவே உணர்ந்திருந்தான். பொருளாதார சிக்கலில் இருந்து மக்களை மீட்கப் போராட்டம் தான் ஒரே வழி... அதுதான் அவன் வழியும்... அந்த வழி எந்தமாதிரியும் இருக்கலாம்.

இப்போதெல்லாம் படியாதவர்களை விடப் படித்தவர்கள்தான் பெரிய ஏமாற்றுப் பேர்வழிகளாக இருக்கிறார்கள். உயரந்த இடங்களில் இருந்து கொண்டு இந்த மனிதர்கள் எப்படியெல்லாம் வேசம் போடுகின்றார்கள். பொய்யும் புரட்டும் இவர்களுக்கு எப்படியெல்லாம் சேவகம் செய்கின்றன? ஏன் நான் படித்தேன்? அவன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

அவன் தனிமையில் அமர்ந்திருந்தான். மாலை, இரவைப் பிரசவித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அந்தப் பிரக்ஞை அவனுக்கில்லை. எழுந்து சென்று மின் விளக்கை ஏற்றவும் விருப்பமில்லை.... அவன் கேட்டான்.

என் வீடு மட்டும்தானா இருளில் இருக்கின்றது? இந்த உலகம்தான் உண்மையான இருளில் இருக்கின்றது. பாவம் இந்தப் பன்னிரண்டு மணித்தியால இருளால் என்ன செய்திட முடியும்?

இக் கேள்வியைத் தனக்குள் கேட்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. என் மனைவி, இவனுக்கு என்ன 'தட்டித்தோ' என்று கூடச் சந்தேகப்படுவாள். இப்படி நினைத்தபோது அவனுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

உண்மைதான்.... இந்த உலகம் ஆழமாகச் சிந்திப்பதே இல்லை. சோக்கிரட்டீஸ், பெரியார் ஈ.வேரா போல் இப்போது யாரையும் கண்டுகொள்ள முடியவில்லை. அது மேய்வதெல்லாம் நுனிப்புல்தான். அநீதி அக்கிரமங்களைக் கண்டால் ஒதுங்கி ஓடிப்போகின்றது. ஏன் என்று கேட்பதில்லை. கேட்பவனைக் கண்டால் பிழைக்கத் தெரியாதவனாய் இருக்கின்றாயே...பேசாமல் இரு என்கிறது. தான் மட்டும் வாழ்ந்தால் சரி. இதுதான் அதன் இலக்கு.

நரித்தனமான அதன் ஆலோசனைக்கு செவிமடுக்க மறுத்தால் 'நீ என்ன புத்தனா யேசுவா...' என்று கேலி செய்கின்றது. அப்படியானால் இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஒரே ஒரு வழி 'ஆமாம்' போடும் அடிமைத்தனம் தானா?

இந்த மாதிரி எண்ணவே அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. அப்படி ஆமாம் போட்டு யாசகனாக வாழ்வதைவிட, அகால மரணம் அடைவது எவ்வளவோ மேல்... அவன் மனம் தெளிவாகச் சொன்னது.

இருள்- குழந்தை பிறந்து பல கணங் களாகி விட்டன. ஆனாலும் அவன் அந்த இடத்தி லேயே இருந்தான். பக்கத்து வீடுகளிலெல்லாம் மின்சாரம் தன்னை பளிச்செனக் காட்டிக் கொண்டிருக்கின்றது. அவன் அதைப்பற்றி யெல்லாம் கவலைப்படவேயில்லை. ஏனெனில் இந்த வெளிச்சத்தால் எந்தப் பலனும் இல்லை என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்.

அன்று அவன் மனைவியும் மக்களும் எங்கேயோ போயிருந்தார்கள். எங்கே போனதென்றே அவனுக்கு நினைவில்லை. அவனும் நாயும் தான் இப்போது வீட்டில். நாய் அவனுக்குப் பக்கத்தில் படுத்திருந்தது. அதுவும் அவனைப் போல வெளிச்சத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதற்கு எல்லாமே ஒன்று தான்.ஆனாலும் ஒரு விதத்தில் அதிஸ்டசாலி. ஆமாம், அது அவனைப் போல சிந்திப்பதில்லை. சிந்திப்பதால்த்தானே இத்தனை சித்திரவதை களும்...! உண்மையிலேயே சிந்திக்காதவன் பாக்கியசாலிதான். யேசுநாதருக்கு இது தெரியவில்லைப் போலும். இல்லாவிட்டால் சிந்திக்காதவர்கள் பாக்கியசாலிகள். ஏனெனில் அவர்கள் எப்போதும் சந்தோசமாக இருப்பார்கள் என்று திருவுளம் பற்றியிருப்பார்.

வீதியில் ஜனநடமாட்டம் நன்றாகக் குறைந்திருந்தது. பொதுவாக இருட்டுப்பட்டால் அந்த வீதியில் ஜனங்கள் போக விரும்புவ தில்லை. இருட்டில் பள்ளம், குழிகளில் விழுந் தெழும்ப யாருக்குத்தான் விருப்பம் வரும்? அப்படி விழுந்தெழும்புபவர்கள் பெரும்பாலும் குடிகாரர்களாகத்தான் இருப்பார்கள். அந்த நேரத்தில் முனிசிப்பல்காரர்களுக்கும் எம்பிகளுக் கும் நல்ல அபிஷேகம் கிடைக்கும்.

அப்படி அபிஷேகம் செய்பவர்கள் அடுத்த நாள் அதே றோட்டில் எதுவும் தெரியாதவர்கள் போல் போவார்கள். ஆமாம்.. குடித்தால்த்தான் சிலருக்கு வீரமும் ரோஷமும் பொத்துக்கொண்டு வரும். இல்லையென்றால் அப்பாவிகள்தான்.

அவன் இருட்டுக்குள்ளேயே இருந்தான். அவனுக்கு எழும்பவே விருப்பமில்லை. இந்த உலகம் புற இருளுக்குத்தான் பயப்படுகின்றது. இதைவிட மோசமான அக இருள் பற்றி கவலைப்படுவதே இல்லை. அப்படி ஒன்று இருப்பதுகூட அதற்குத் தெரியாது. அவன் சிரித்தான்.

இந்த உலகத்தின் தீமைக்கெல்லாம் எது காரணம்? புற இருளா...? இல்லை... இந்த அக இருள்தான். இது அவனைப் பொறுத்தவரையில் அறியாமையே தவிர வேறொன்றும் இல்லை. ஆத்மா ஆன்மீகம் என்பதெல்லாம் வெறும் கற்பனை. அதில் அவனுக்கு நம்பிக்கையும் இல்லை. இந்த அழகான உலகத்தில் வாழத் தெரியாத மனிதன், அடுத்த உலகம் பற்றியெல் லாம் சிந்திப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்று அவன் பலரோடு வாக்குவாதப்பட்டிருக்கின்றான். சொர்க்கம் நரகம் என்பதெல்லாம் வெறும் சோடிப்புக்கள். இது தான் அவன் ஆழமான கருத்து.

அக இருள்தான் பிரச்சினைகளுக்கு அத்திபாரம்... இது இருக்கும்வரை தீமைகளும் இருந்து கொண்டே இருக்கும். இந்த இருளைப் போக்கத்தான் ஆராரோ எல்லாம் அவதாரம் எடுத்ததாகச் சொல்கிறார்கள். ஆனாலும் அவர் களால் அதனை அளக்கவே முடியவில்லை. மாறாக அந்த முயற்சியில் அவர்கள் தான் முடிந்து போனார்கள்.

“என்ன இன்னும் லைற் போடாம இருக்கிறீங்க...” கேற்றைத் திறந்து கொண்டு, அவன் மனைவிதான் கேட்டாள். அதற்குப் பின்பும் அவன் எழும்பவேயில்லை. அவனைப் பொறுத்தவரையில் இந்த இருள் இருளே அல்ல.

அவன் எப்போதும் வெளிச்சத்தில்த்தான் இருக்கின்றான். அதனால்த்தான் அவனால் எந்த நேரத்திலும் எதையும் பார்க்க முடிகிறது.

அவன் உண்மையிலேயே விந்தை யான மனிதன்தான். இப்படிப்பட்டவர்களை ஆயிரத்தில் ஒருவன்' என்று சொல்லக் கூடாது. ஏனென்றால் அது தனிப்பட்ட ஒருவருக்காக உருவாக்கப்பட்ட சினிமாக்கதை. இவன் ஆயிரத்தில் ஒருவன் அல்ல. இலட்சத்தில் ஒருவன். இந்த இலட்சியவாதிகள் தான் வரலாற்றின் நாயகனாகப் போற்றப்படுகின் றார்கள். அந்தப் புகழ் அவனுக்குக் கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி அவன் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவனாக இருப்பான்.அதுதான் உண்மை.

(உண்மையும் கற்பனையும்)

**வாகரைவாணன்**

**அறிந்ததை சொல்ல வந்தோம்**

# பட்டினியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கைக்கு 84ஆவது இடம்

**உலகின் சனகத்தொகையில் 27வீதமானவர்கள் பட்டினியால் பாதிப்பு. 119 நாடுகளில் 52 நாடுகள் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இலங்கை 84ஆவது இடத்தில் உள்ளது. சர்வதேச உணவு கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனம் தகவல்**

உலகளவில் பட்டினியால் வாடுபவர்கள் அதிகம் இருக்கும் நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டியலின் ஒழுங்கில், இலங்கை 84 ஆவது இடத்தை பெற்றுள்ளதாக சர்வதேச உணவு கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டிற்கான பட்டியல் ஒழுங்கில் உள்ள 119 நாடுகளில் இலங்கை 84 ஆவது இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் இப்பட்டியல் வரிசையில் 97 ஆவது இடத்தை பெற்றி ருந்த இந்தியா இவ்வருடம் 100 வது இடத்தை பெற்றுள்ளதாக பட்டியல் விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ் விபரங்களின் அடிப்படையில் ஒப்பிட்டு நோக்கும் போது இந்தியாவைவிட இலங்கை பட்டினியால் வாடுபவர்களின் தொகையில் குறைவான நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வளரும் நாடுகளில் பட்டினியால் வாடுபவர்கள் அதிகம் இருக்கும் நாடுகளின் பட்டியலில் நேபாளம், மியன்மார், ஈராக், இந்தோனேஷியா ஆகிய நாடுகள் இலங்கையை விட முன்னிலையில் உள்ளன. இலங்கையை விடவும் பாகிஸ்தான், இந்தியா ஆகிய ஆசிய நாடுகள் பின் தங்கிய நிலையில் உள்ளன. சர்வதேச உணவு கொள்கை ஆய்வு கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி,பசி, பட்டினி பிரச்சினையால் அதிக அளவிலான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள நாடாக இந்தியா இடம்பெறுகின்றது.

# பல்கலைச் செல்வி இராஜம் புஷ்பவனம் படைப்புக்கள்



இந்நூலானது பல்கலை ஆளுமையாகத் திகழ்ந்த எழுத்துலகில் தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்துக் கொண்ட திருமதி என்.இராஜம் புஷ்பவனத்தின் பல்வேறுபட்ட எழுத்துப் பரிமாணங்களைக் கொண்டதாகும்.

இவர், பல சிறுகதைகள், கவிதைகள், வானொலி நாடகங்கள் என எழுதிய போதிலும் அவர் வாழுங்காலத்தில் அவை நூலுருப் பெறவில்லை. அதன் காரணமாக அவரது காலத்தில் எழுத்துப்பணியில் ஈடுபட்ட ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்கும் இளந் தலைமுறையினருக்கும் இவரது படைப்புக்களை வாசிக்கும் சந்தர்ப்பம் ஏதும் ஏற்படாமற்போனது.

ஒரு படைப்பாளி தனது படைப்புக்களை அவர் வாழும் காலத்திலேயே தொகுத்து வெளியிட வேண்டும். அப்படி வெளியிடும் போதுதான் அவரது எழுத்துக்களை வருகின்ற சந்ததி அறிந்து கொள்ளவும், அது ஓர் ஆவணப்பதிவாகவும் திகழும். அப்படி அல்லாத சமயத்தில் அவை மறைந்தளிந்து போவதை நாம் காண்பதுண்டு. ஆயினும், அப்படி நூலுருவாக்கம் பெறும் ஆக்கங்கள் கூட காலத்தின் வேகத்தில் காணாமற் போவதும் நாமறிந்தவிடயமே.

நான் எழுத்துத் துறையில் ஈடுபட்ட காலத்திலேயே திருமதி.இராஜம் புஷ்பவனம் அவர்களும் எழுத்துப்பணியில் இருந்தார். அவரது சிறுகதைகள், கவிதைகள் என்பவற்றோடு அவர் எழுதிய மெல்லிசைப் பாடல்கள், வானொலி நாடகங்கள் என்பனவற்றையும் படித்தும் கேட்டும் வந்ததுண்டு. இருந்த போதிலும் அவரது பல்வேறுபட்ட ஆக்கங்கள் அவரது காலத்திலும் நூலுருப் பெறாமல் போனதையிட்டு எனக்கு ஓர் மனக்குறையாக இருந்தது. ‘கற்பகம்’ சஞ்சிகையில் (1971) அவரது சிறுகதையொன்று வெளிவந்ததாக ஞாபகம்.

எனது அந்த ஆதங்கத்தை தற்பொழுது பிரான்சில் வசிக்கும் அவரது மகளான ஆனந்தரஜனி யிடமும் (ரேவதி மோகன்) இளைய தங்கை நிர்மலாதேவி(நிம்மி) அவர்களிடமும் நான் வெளிப்படுத்தி யிருந்தேன். அவர்களும் உடனடியாக செயலில் இறங்கி எழுத்துருவில் தேங்கிக்கிடந்த அவரது படைப்புக்களை என்னிடம் கையளித்ததோடு அதற்கான பொருளாதார உதவிகளையும் நல்க முன்வந்தனர்.

ஒருவர் இறந்து விட்டால் பல ஆயிரங்களை செலவழித்து “கல்டவெட்டு” அடித்து கலர் காட்டும் எமது சமுதாயத்தில் அதற்கு மாறாக தனது அன்பு அன்னையின் அரிய இலக்கியப் படைப்புக்களை காலந்தாழ்த்தியாவது நூலுருவாக்கி ஆவணப்படுத்த முன் வந்த அவரது ஒரே மகளான ஆனந்தரஜனி (ரேவதி - மோகன்) ஒரு முன்னுதாரணமாக திகழ்வதையிட்டு நான் மிகவும் பெருமை கொள்கின்றேன்.

அதேவேளை இந்நூலுக்கான அறிமுக உரையை வழங்கிய கவிஞர் கலைவாதி கலீல் அவர்களுக்கு நன்றியைத் தெரிப்பதோடு, சகோதரியின் படைப்புக்கள் நூலுருவாக வேண்டுமென மிக ஆவலுடன் செயலாற்றிய திருமதி. நிர்மலாதேவி (நிம்மி), திருமதி. கனக பாலதேவி, திருமதி. விஜிலன் புஸ்பநாயகி(மீனா) ஆகியோருக்கும், வேறும்.

பல்வேறு விதத்தில் இந்நூலுருவாக்கத்திற்கு உதவிய திரு.க.தீபகாந்தனுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்ட உதவிய கவிஞர் யாழவன் மற்றும் அச்சக உரிமையாளர் ஏனையோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

**ஷெல்லிதாசன்**
**திருகோணமலை**

**உங்கள் விருந்து**

## தாயக ஒலி




தாயக ஒலியின் 30வது இதழ் கண்டேன். அட்டையில் பவளவிழா நாயகர் முத்தையா அவர்களும் அவரது அன்புத் துணைவியாரும் அழகுடன் காட்சி தருகின்றார்கள். சாதனை வீரர் முதரளீதரனும் அவர்களுடன் காணப்படுகின்றார். நல்லவர்களை வல்லவர்களை அட்டையில் தரிசிக்க வைத்த 'தாயக ஒலி' ஆசிரியருக்கு நன்றிகள்.

'மனிதம் மரணித்து விட்டது' என்ற ஆசிரியரின் தலையங்கம், சமுதாயத்தில் வேரோடியிருக்கும் மனித ஜடங்களின் கீழ்த்தரமான செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றது. பேராசிரியர் சபா ஜெயராசாவின் கட்டுரையில் ஆடற் கலையைப் பற்றிய தமது புலமை வெளிப்பாட்டை அற்புதமாக நிலைநிறுத்தியுள்ளார்.

மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையனை முழுமையாக அறியத்தந்த எம்.கே.முருகானந்தம் அவர்களும் பாராட்டுக்குரியவர். எண்பத்தேழு வயதிலும் மனித நேய எழுத்துப்பணி துறக்காதவர் என்ற வகையிலும் நீர்வை பொன்னையன் பெருமைக்குரியவர் ஆகிறார். புதிர் சிறுகதை சிந்திக்க வைத்துள்ளது. முற்போக்கு எழுத்தாளர் இளங்கீரன் அவர்களை எழுத்தால் தரிசிக்க வைத்த தம்பு சிவாவுக்கு நன்றிகள். 'கோடரிக்காம்பு' என்ற மா.பாலசிங்கத்தின் சிறுகதை சாதாரண மனிதர்களுக்கு புரியதா புதிராகவே இருக்கின்றது.

'அறிந்ததைச் சொல்ல வந்தோம்' என்ற பகுதியில் இலக்கியவாதிகளின் மனப்பதிவுகள் மூலம் வாசகர்களுக்கு அரிய தெரியாத விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. எமது நாட்டுப் புலவர் தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரனார் பற்றிய கட்டுரை இளம் சமுதாயத்தினரின் தேடலுக்கு உறுதுணையாக இருப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம். பெண்ணெனும் ஓவியம்' என்னும் அருட்சகோதரரின் கட்டுரையில்" பெண்களை எம் கண்களாக மதிக்கும் காலத்தை நாம் இன்றிலிருந்து செதுக்கிடுவோம்' என்னும் கூற்று உளவியல் ரீதியாகப் பெண்களை உற்சாகப்படுத்தும் என நம்பலாம்.

மேலும் உருவக்கதை, மாவோவின் கவிதைகள், பின்லாந்தின் கல்வித்திட்டம், சிறுவர்கதை, மனதைத் தொட்டதும் சுட்டதும், நாடோடிக் கதை, பாலபாடக் கதை, உங்கள் விருந்து போன்ற பயன்தரும் விடயப் பரப்புக்களுடன் இன்னும் பல விடயங்கள் அறிவுக்கு விருந்தாக அமைந்திருப்பது 'தாயக ஒலி' யின் தனிச்சிறப்பென்றே கூற வேண்டும். மிகப் பெரிய பரப்புக்குள் கால்பதித்து நீங்கள் ஆற்றும் பணி உண்மையிலேயே எம்மை அதிசயிக்க வைக்கிறது. பணிதொடர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**செல்வராசா, குமுதினி தம்பதியினர் திருகோணமலை**

25 வருடகால அனுபவம்

# Linga & Co

## Legal Advisors & Immigration Specialists



## We Specialise in :

- Asylum and Immigration Matters
- Human Rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Appplication and Appeal
- Injunctions & Judicial Reviews Through Associate Solicitors
- Work Permits
- EEA Applications (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

**V.P.Lingajothy**

LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX

Principal

immigration Specialist

E-mail:mrlinga@aol.com

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாகத் தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகின்றோம்

- Family Law
- Employment Law
- Criminal Law

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்புகொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**

# Kanaga Solicitors

108 High Street, Colliers Wood
London - SW19 2BT

## KEY PERSONNAL

Kanakavalli Nadarajanpillay

Position in the firm : Principal Solicitor

### Academic / Professional Qualifications :

L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

### Relevant and present Experience :

Immigration Asylum, Residential Conveyancing, Commercial Conveyancing, Civil Litigation, Criminal Litigation, Family & Divorce Cases, Land Lord & Tenant, Wills and Probate.

Successful practitioner of 18 years.


108 High Street, Colliers Wood
London - SW19 2BT
E mail : kanakavalli_ek@yahoo.com

Tel : 078 7827 8131
020 8544 1100

# Western Jewellers

Jewellers & Gem Merchants



வகை வகையான வடிவங்களில்
தரமான தங்க நகைகளை
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள் உங்கள்

## வெஸ்டன் ஜீவல்லர்ஸ்க்கு

## First Tamil Jewellery Shop in UK

Specialise in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery



**TOOTING BRANCH**
230, UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW
UNITED KINGDOM
TEL 020 8767 3445

**WEMBLEY BRANCH**
5, PLAZA PARADE
EALING ROAD, WEMBLEY
HA0 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909

**SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIUM SAREES**

## SILK EMPORIUM

122 Upper Tooting Road,
London SW 17 7EN
United Kingdom
Tel : 020 8672 1900

Opening Hours : Monday - Saturday (10.30am-6.30pm), Sunday (11.30am - 6.30pm)

# Luckyland

## BISCUIT MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA

TEL: +94 081 2420574, 2420217 FAX : +94 081 2420740

E-mail : luckyland@sltnet.lk